# தின பூமி

thinaboomi.com

புதுச்சேரி, ஞாயிறு, மார்ச் 30, 2025 ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி பக்கம் 8 ₹ 3.00




**மீண்டும் மன்னராட்சி கோரி நேபாளத்தில் போராட்டம்; வன்முறை - இருவர் பலி**

...2-ம் பக்கம்

**நிலநடுக்கத்தால் கடும் பாதிப்பு: மியான்மர் ராணுவ ஜெனரலிடம் விவரங்களை கேட்டறிந்த பிரதமர்**

...3-ம் பக்கம்

**பாதுகாப்பு காரணங்களுக்காக கொல்கத்தா - லக்னோ போட்டி ஏப். 8-ம் தேதிக்கு திடீர் மாற்றம்**

...6-ம் பக்கம்





● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று காவல்துறை சார்பில் ரூ.19 கோடியே 80 லட்சத்து 23 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள 96 காவலர் குடியிருப்புகள், 2 காவல் நிலையங்கள், மீட்புப்பணிகள் துறை சார்பில் ரூ.21 கோடியே 51 லட்சத்து 78 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள தீயணைப்பு மற்றும் மீட்பு பணியாளர்களுக்கான 45 குடியிருப்புகள், 4 தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையக் கட்டிடங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

### தி.மு.க. எப்போதும் முதலிடத்தில் உள்ளது:

# தமிழ்நாடு அரசியல் களத்தில் 2-ம் இடத்திற்குதான் போட்டி

## சென்னை ரம்ஜான் விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு

சென்னை, மார்ச் 30-

**தமிழ்நாடு அரசியல் களத்தில் தி.மு.க. எப்போதும் முதலிடத்தில் உள்ளது என்றும் இங்கு 2-ம் இடத்திற்குதான் போட்டி என்றும் சென்னையில் நடைபெற்ற ரம்ஜான் விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். மேலும் அவர், ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் சிறுபான்மை மக்களுக்கு எப்போதும் தி.மு.க. பாடுபட்டு வருகிறது என்றும் அவர் தெரிவித்தார்.**

**தனித் தீர்மானம்....**

சென்னை பெரம்பூரில் நடைபெறும் ரம்ஜான் விழாவில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார். அப்போது பேசிய அவர், அடுத்த 5 ஆண்டுகளில் தமிழ்நாடு அடையும் வளர்ச்சிக்கு அடித்தளமாக தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வக்பு வாரிய சட்டத்திருத்த மசோதாவுக்கு எதிராக பாராளுமன்றம், கூட்டுக்குழுவில் தி.மு.க. சார்பில் குரல் எழுப்பி வருகிறோம். இஸ்லாமியர்களை வஞ்சிக்கும் சட்டத்திருத்தத்துக்கு எதிராக பேரவையில் தனித் தீர்மானம் நிறைவேற்றியுள்ளோம்.

**பாடுபட்டு வருகிறது...**

தொடர்ந்து பேசிய அவர், இஸ்லாமியர்களுக்கு எதிராக எது நடந்தாலும் முதல் எதிர்ப்பு குரல் கொடுப்பது தி.மு.க. தான். ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் சிறுபான்மை மக்களுக்கு எப்போதும் தி.மு.க. பாடுபட்டு வருகிறது.

சிறுபான்மையினருக்கு அரணாக விளங்குவது தி.மு.க. எல்லாக் கட்சியினரும் இஃப்தார் நோன்பு விழா நடத்துவார்கள்,

ஆனால் இஸ்லாமியர்களுக்கு ஒரு தீமை என்றால் வாயே திறக்கமாட்டார்கள். ஆனால், குடியுரிமை திருத்தச் சட்டம், காஷ்மீர் சிறப்பு அந்தஸ்து என சிறுபான்மையினருக்கு எதிராக என்ன நடந்தாலும் முதல் எதிர்ப்புக் குரல் எழுப்புவது தி.மு.க. தான்.

**முதலிடத்தில்....**

வக்பு வாரிய சட்ட திருத்தத்துக்கு எதிராக தி.மு.க. சார்பில் தொடர்ந்து குரல் எழுப்பி வருகிறோம். இஸ்லாமியர்களை வஞ்சிக்கும் இந்த மசோதாவை முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி அறிவித்து இருக்கிறோம். தமிழக அரசியலில் 2-ம் இடத்திற்குதான் போட்டி உள்ளது. எப்போதும் முதலிடத்தில் தி.மு.க. உள்ளது.

**அமித்ஷாவை...**

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி இரவோடு இரவாக திட்டம் தீட்டி விடியற்காலையில் டெல்லி சென்று, விமான நிலையத்தில் இறங்கி 4 கார்கள் மாறி மாறி போய், ஏதோ கொள்ளையடிக்கப் போவது போல வக்பு வாரிய திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற துடிக்கும் மத்திய உள்துறை அமித்ஷாவை சந்தித்துள்ளார். மறுநாள் வக்பு வாரிய சட்ட திருத்தத்துக்கு எதிராக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப் போகிறோம் எனத் தெரிந்தும் அவர் சட்டமன்றத்துக்கு வரவில்லை

### தெலுங்கு, கன்னட உடன்பிறப்புகளுக்கு

# தமிழக முதல்வர் ஸ்டாலின் யுகாதி திருநாள் நல்வாழ்த்து

சென்னை, மார்ச் 30-

**புத்தாண்டை வரவேற்கும் தெலுங்கு, கன்னட உடன்பிறப்புகள் அனைவருக்கும் எனது யுகாதி திருநாள் நல்வாழ்த்துகள் என்று தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்பதாவது:-

திராவிட மொழிக் குடும்பத்தில் தமிழின் உடன்பிறப்பு மொழிகளான தெலுங்கு, கன்னட மொழி பேசும் மக்கள் புத்தாண்டாகக் கொண்டாடும் உகாதி திருநாள் இன்று கொண்டாடப்படுகிறது. தமிழ்நாட்டில் உள்ள மொழிச்சிறுபான்மையினரை என்றும் மதித்துப் போற்றி அவர்களின் உற்ற தோழனாய் விளங்குவது கழக அரசு. உகாதி திருநாளுக்கு அறிவிக்கப்பட்ட அரசு விடுமுறை அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் ரத்து செய்யப்பட்டாலும் 2006-ம் ஆண்டு அதனை மீண்டும் நடைமுறைப்படுத்தியவர் அப்போது முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் ஆவார்.

தமிழ் முதலிய திராவிட மொழிகள் பேசும் தென் மாநிலங்கள் அனைத்தும் தொகுதி மறுசீரமைப்பில் தங்கள் குரல் நெரிக்கப்படும், நாடாளுமன்றத்தில் வலிமை குறைக்கப்படும் ஆபத்தை எதிர்நோக்கியிருக்கும் நிலையில் நமது ஒற்றுமையை மார்ச் 22 அன்று சென்னையில் வெளிப்படுத்தி இருந்தோம். மேலும், அடுத்தடுத்த கூட்டங்கள் நடைபெறவுள்ளன. நாடு முழுவதும் நமது முன்னெடுப்புக்குக் கவனமும் ஆதரவும் பெருகி வருகிறது.

இன்று தென்மாநிலங்கள் பொருளாதாரரீதியாக அடைந்துள்ள வளர்ச்சிக்கு முதன்மையான காரணங்களில் ஒன்று அரை நூற்றாண்டுக்கு முன்னரே இந்தித் திணிப்பை எதிர்த்து நாம் நடத்திய மொழிப்போர்தான்.

இப்போது மீண்டும் இந்தித் திணிப்பு மூலம் அந்த வளர்ச்சியையும் நமது மொழி அடையாளத்தையும் அழிக்கத் திட்டமிட்ட முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இந்த வேளையில், தாய்மொழியின் அருமையை உங்கள் பிள்ளைகளுக்கு நீங்கள் உணர்த்த வேண்டும். மொழி இருந்தால்தான் இனம் இருக்கும். தெற்கின் மேல் தொடுக்கப்படும் சமூக, அரசியல், பண்பாட்டுப் படையெடுப்பைத் தடுத்து நிறுத்த அடுத்த தலைமுறையையும் நாம் ஆயத்தப்படுத்த வேண்டும். இதையே எனது உகாதி புத்தாண்டுச் செய்தியாக, கோரிக்கையாக உங்கள் முன்வைக்கிறேன்.

அறுசுவைப் பச்சடி, மாவிலைத் தோரணம், வண்ணக் கோலம் என எழுச்சியோடு புத்தாண்டை வரவேற்கும் தெலுங்கு, கன்னட உடன்பிறப்புகள் அனைவருக்கும் எனது உகாதி திருநாள் நல்வாழ்த்துகள். நமது மொழி, அரசியல் உரிமைகளைக் காப்பதற்கான ஊக்கத்தை வழங்குவதாக இந்த உகாதி திருநாள் அமையட்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### மத்திய அரசிடம் இருந்து

# மக்கள் பணத்தை வாங்கி தராமல் விடமாட்டோம்

## அமைச்சர் துரைமுருகன் பேட்டி

காட்பாடி, மார்ச் 30-

**பாஜக, மோடி என்றெல்லாம் சொல்லி இனி யாரும் இங்கு வாக்கு சேகரிக்க முடியாது என தெரிவித்த அமைச்சர் துரைமுருகன், மத்திய அரசிடம் இருந்து மக்கள் பணத்தை வாங்கி தராமல் விடமாட்டோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.**

மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதித் திட்டத்தில் தமிழகத்திற்கு கொடுக்க வேண்டிய ரூ. 4,034 கோடியை வழங்காமல் தொடர்ந்து வஞ்சித்து வரும் மத்திய அரசைக் கண்டித்து வேலூர் மாவட்டத்தில் நேற்று 21 இடங்களில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் காட்பாடி அடுத்த பிரம்மபுரம் கிராமத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தி.மு.க. பொதுச் செயலாளர் துரைமுருகன் கலந்து கொண்டார். மத்திய அரசுக்கு எதிராக இதில் உறுதிமொழி ஏற்கப்பட்டது. மேலும் வேலூரில், தி.மு.க. -த.வெ.க. இடையே போட்டி என விஜய் கூறியது பற்றிய செய்தியாளர்களின் கேள்விக்குப் பதிலளித்த அவர், யார் யாருக்கு போட்டியோ, அதைப் பற்றி நாங்கள் கவலைப்படவில்லை, எங்கள் கட்சியில் நாங்கள் உழைப்போம், நாங்கள் ஜெயிப்போம். யார் யாரோடு சேருகிறார்கள் என்றெல்லாம் எங்களுக்குக் கவலை இல்லை" என்று தெரிவித்தார். மேலும் அவர் பேசுகையில், இந்த ரூ. 4,034 கோடி யாருடைய அப்பன் வீட்டு பணமும் கிடையாது. மத்திய அரசின் பணம். இதை நிறுத்தக் காரணம் இந்த திட்டத்தின் பெயர்தான். 'மகாத்மா காந்தி வேலை உறுதி திட்டம்' என பெயர் வைக்கப்பட்டுள்ளது. அது மோடி அரசுக்கு பிடிக்கவில்லை. காந்தியை சுட்டவர்கள் அவர்கள். காந்தியின் பெயரில் இத்திட்டம் இருப்பது அவர்களுக்குப் பிடிக்கவில்லை அதனால்தான் பணம் தர மறுக்கிறார்கள்.

மோடி பணத்தைக் கொடுக்காமல் ஏமாற்ற முடியாது. பாஜக, மோடி என்று சொல்லி இனி ஓட்டுக் கேட்க முடியாது. அந்த அளவுக்கு மக்களுக்கு துரோகம் செய்துள்ளார்கள். மோடி அல்ல, அவன் பாட்டன் சொன்னாலும் மக்கள் பணத்தை வாங்கித் தராமல் விடமாட்டோம்" என பேசினார்.

# மியான்மரில் ஏற்பட்ட நிலநடுக்க பலி எண்ணிக்கை ஆயிரத்தை கடந்தது

## 15 டன் நிவாரண பொருள்களை அனுப்பியது இந்தியா

நைப்பியிதோ, மார்ச் 30-

**மியான்மர், தாய்லாந்தில் பூகம்பத்தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 1000-ஐ கடந்துள்ளது. 1600-க்கும் மேற்பட்டோர் காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் இந்திய அரசு 'ஆபரேஷன் பிரம்மா' என்ற பெயரில் மியான்மருக்கு நிவாரணப் பொருட்களை அனுப்பி வைத்துள்ளது. உணவு, கூடாரங்கள், அத்தியாவசிய மருந்துகள் என 15 டன் அளவிலான பொருட்களை இந்திய விமானப் படையின் விமானம் மூலம் மியான்மருக்கு கொண்டு சேர்த்துள்ளது.**



தென்கிழக்கு ஆசிய நாடான மியான்மரில் மோனிவா நகருக்கு அருகே நேற்று முன்தினம் (மார்ச் 28) காலை 11.50 மணி அளவில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. இதில் அந்த நாட்டின் பல்வேறு நகரங்களில் உள்ள கட்டிடங்கள் குலுங்கின. இது ரிக்டர் அளவில் 7.7 ஆக பதிவானது. அடுத்த 10 நிமிடத்தில் அங்கு 2-வது முறையாக நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 6.8 புள்ளிகளாக பதிவானது. மியான்மரின் சாகாயிங் நகரின் வடமேற்கே 16 கி.மீ தொலைவிலும், 10 கி.மீ ஆழத்திலும் இந்த பூகம்பம் மையம் கொண்டிருந்தது. இதைத் தொடர்ந்து, 4 முறை லேசான அதிர்வுகள் ஏற்பட்டன.

அடுத்தடுத்து அதிர்வுகள் ஏற்பட்டதால், மியான்மரின் மண்டலே நகரில் உள்ள மசூதிகள், வீடுகள் இடிந்து விழுந்தன. இங்குள்ள பழமையான அரண்மனையும் இடிந்து விழுந்தது. இந்நிலையில் கட்டிட இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 1000-ஐ கடந்துள்ளது. 1600-க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

**தாய்லாந்தில் பாதிப்பு:**

மியான்மரில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் தாக்கம் தென்கிழக்கு ஆசிய பகுதியில் உள்ள தாய்லாந்து, மலேசியா, வங்கதேசம், லாவோஸ், சீனா மட்டுமின்றி, இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களிலும் உணரப்பட்டது. இதை அமெரிக்கா மற்றும் ஜெர்மனியின் புவியியல் ஆய்வு அமைப்புகள் உறுதி செய்தன. தாய்லாந்தில் இதுவரை 10 பேரின் உயிரிழப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. பாங்காக் நகரின் அடுக்குமாடி கட்டிடம் கட்டுமானப் பணியிடத்தில் 100-க்கும் அதிகமானோர் இடிபாடுகளில் சிக்கியிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. இதனால் அங்கு பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவே தெரிகிறது.

இதற்கிடையே ஆபரேசன் பிரம்மா பெயரில் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள மியான்மருக்கு நிவாரணப் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இந்தியா சார்பில் 15 டன் நிவாரணப் பொருள்கள் அனுப்பப்பட்டுள்ளன. உத்தரப் பிரதேச மாநிலம் ஹிண்டன் விமான நிலையத்தில் இருந்து இந்திய விமானப்படையின் (IAF C 130J) விமானத்தில் அனுப்பப்பட்ட நிவாரணப் பொருள்கள் மியான்மர் சென்றடைந்தன.

இந்த நிலையில், முதல் தொகுதியில் அனுப்பப்பட்டுள்ள பொருள்கள் அனைத்தையும் மியான்மரின் யாங்கோன் முதல்வர் யூ சோ தெய்னிடம் இந்திய தூதர் அபய் தாக்குர் முறையாக ஒப்படைத்தார் என்று வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ரந்திர் ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார். அவற்றில் கூடாரங்கள், தூங்கும் பைகள், போர்வைகள், ரெடிமேட் உணவுகள், தண்ணீர் சுத்திகரிப்பான்கள், சுகாதாரப் பொருள்கள், சூரிய விளக்குகள், ஜெனரேட்டர் பெட்டிகள், அத்தியாவசிய மருந்துகள் (பாராசிட்டமால், நுண்ணுயிர் எதிர்ப்பிகள், கேனுலா, ஊசிகள், கையுறைகள், பஞ்சுகள், சிறுநீர் பைகள் உள்ளிட்ட பிற பொருள்கள்) அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மியான்மர் நிலநடுக்கத்தில் பாதிக்கப்பட்ட

# தமிழர்களுக்கு உதவி எண்கள் அறிவிப்பு

சென்னை, மார்ச் 30-

**மியான்மரில்(பர்மா) ஆயிரத்துக்கும் மேற்பட்ட உயிரிழப்புகளை ஏற்படுத்தியுள்ள மிக சக்திவாய்ந்த நிலநடுக்கம் வெள்ளிக்கிழமை(மார்ச் 28) ஏற்பட்டது. இதை தொடர்ந்து அங்குள்ள தமிழர்களுக்கு உதவி எண்களை அயலகத் தமிழர் நலத்துறை அறிவித்துள்ளது.**

மியான்மர், தாய்லாந்தில் வெள்ளிக்கிழமை(மார்ச் 28) ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து அங்குள்ள தமிழர்களுக்காக உதவி எண்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. உதவி தேவைப்படுவோர் - 1800 309 3793, +91 80690 09901, +91 80690 09900 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ள அயலகத் தமிழர் நலத்துறை அறிவுறுத்தியுள்ளது.

இதற்கிடையே மியான்மரில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து பாங்காக்கில் இருந்து இந்திய பயணிகள் தாயகம் திரும்பினர். மியான்மரில்(பர்மா) ஆயிரத்துக்கும் மேற்பட்ட உயிரிழப்புகளை ஏற்படுத்தியுள்ள மிக சக்திவாய்ந்த நிலநடுக்கம் வெள்ளிக்கிழமை (மார்ச் 28) ஏற்பட்டது. மியான்மர் மட்டுமல்லாது தாய்லாந்து, வியட்நாம், சீனாவிலும் உணரப்பட்ட நில அதிர்வுகளால் மேற்கண்ட நாடுகளில் பல பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில், தாய்லாந்தின் பாங்கக் நகரிலிருந்து இந்திய பயணிகள் பலர் விமானம் மூலம் புது தில்லி விமான நிலையத்துக்கு சனிக்கிழமை (மார்ச் 29) வந்தடைந்தனர். இதனிடையே, தில்லி விமான நிலையத்தில் வந்திறங்கிய பயணிகள் பலரும், நிலநடுக்கம் ஏற்பட்ட வெள்ளிக்கிழமை(மார்ச் 28) பாங்காக்கில் உணவு, தண்ணீர், கால் டாக்ஸி கிடைக்காமல் தாங்கள் மிகுந்த சிரமப்பட்டதாகத் தெரிவித்துள்ளனர். எனினும், நல்லபடியாக தாங்கள் தாயகம் திரும்பியதற்கு கடவுளுக்கு நன்றி தெரிவிக்கிறோம் என்றும் அவர்கள் கூறினர்.

# சத்தீஷ்கரில் 16 நக்சலைட்டுகள் சுட்டுக்கொலை

சுக்மா, மார்ச் 30-

**சத்தீஷ்காரில் பாதுகாப்பு படையினருடனான சண்டையில் நக்சலைட்டுகள் 16 பேர் சுட்டு கொல்லப்பட்டனர்.**


சத்தீஷ்காரின் சுக்மா மாவட்டத்தில் கேர்லாபால் காவல் நிலையத்திற்கு உட்பட்ட வன பகுதியில் நேற்று காலை பாதுகாப்பு படையினர், ரோந்து பணியில் ஈடுபட்டனர். நக்சலைட்டுகளை ஒழிக்கும் பணியின் ஒரு பகுதியாக அவர்கள், மாவட்ட ரிசர்வ் படை மற்றும் சி.ஆர்.பி.எப். படையினருடன் இணைந்து தேடுதல் வேட்டையிலும் ஈடுபட்டு இருந்தனர்.

அப்போது, பதுங்கியிருந்த நக்சலைட்டுகள், அவர்களை நோக்கி துப்பாக்கி சூடு நடத்தினர். இதனை தொடர்ந்து நடந்த சண்டையில் நக்சலைட்டுகள் 16 பேர் சுட்டு கொல்லப்பட்டனர். அந்த பகுதியில் இருந்து அவர்களின் உடல்கள் மீட்கப்பட்டன. தொடர்ந்து தேடுதல் வேட்டை தீவிரப்படுத்தப்பட்டு உள்ளது. இந்த மோதலில், 2 வீரர்கள் காயமடைந்தனர் என அதிகாரி ஒருவர் கூறினார்.


**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
|---|---|
| -191.51 | -72.06 |
| பாயின்ட் 77,414.92 | பாயின்ட் 23,591.95 |



**தங்கம்**
1 சவரன் ₹66,880
1 கிராம் ₹8,360



**வெள்ளி**
1 கிலோ ₹111,000
1 கிராம் ₹111.00

**டாலர்** ₹85.56

**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34



### மீண்டும் மன்னராட்சி கோரி
# நேபாளத்தில் போராட்டம்; வன்முறை - இருவர் பலி



**காத்மாண்டு, மார்ச் 30-**

நேபாளத்தில் முடியாட்சிக்கு ஆதரவாக நடைபெற்ற போராட்டத்தின்போது ஏற்பட்ட வன்முறையில் கார்களுக்கு தீ வைக்கப்பட்டன, கடைகள் சூறையாடப்பட்டன. இதனால், தலைநகர் காத்மாண்டில் பதற்றமான சூழல் நிலவுகிறது.

நேபாளத்தில் மீண்டும் மன்னராட்சி கோரி, முன்னாள் மன்னர் ஞானேந்திர ஷாவின் ஆதரவாளர்கள் கடந்த சில நாட்களாக தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். தலைநகர் காத்மாண்டுவில் நேற்று நடைபெற்ற போராட்டத்தின்போது வன்முறை ஏற்பட்டது. ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியின் அலுவலகத்தைத் தாக்கிய நூற்றுக்கும் மேற்பட்ட போராட்டக்காரர்கள், வாகனங்களுக்கு தீ வைத்து, கடைகளை சூறையாடினர்.

மற்றொரு சம்பவத்தில், காத்மாண்டு தலைநகரில் உள்ள நாடாளுமன்றக் கட்டிடத்தை நோக்கி போராட்டக்காரர்கள் கற்களை வீசினர். இதில், நூற்றுக்கும் மேற்பட்ட காவல்துறையினர் காயமடைந்தனர். ஒரு தொலைக்காட்சி கேமரா மேன் மற்றும் ஒரு போராட்டக்காரர் என இருவர் இதில் கொல்லப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். நிலைமையைக் கட்டுப்படுத்த ராணுவம் வரவழைக்கப்பட்டது.

இந்த வன்முறை தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய தகவல் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் பிருத்வி சுப்பா குருங், "இது ஒரு அப்பட்டமான நாசவேலை, தீ வைப்பு, கொள்ளை மற்றும் அராஜகம். இது ஒரு போராட்டமாக இருக்க முடியாது." என்று கூறினார்.

நேபாளத்தில் 239 ஆண்டு கால மன்னராட்சி கடந்த 2008 ஆம் ஆண்டு முடிவுக்கு வந்தது. நாட்டின் கடைசி மன்னரான 77 வயதான ஞானேந்திரா, காத்மாண்டுவில் உள்ள ஒரு தனியார் வீட்டில் தனது குடும்பத்துடன் ஒரு சாதாரண குடிமகனாக வசித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கிரீன்லாந்தை கைப்பற்றும் ட்ரம்ப் திட்டத்தில் ரஷ்யா தலையிடாது
### அதிபர் விளாடிமிர் புதின் திட்டவட்டம்

**மாஸ்கோ, மார்ச் 30-**

கிரீன்லாந்தை கைப்பற்றும் டொனால்ட் ட்ரம்ப்பின் திட்டத்தில் ரஷ்யா தலையிடாது என விளாடிமிர் புதின் தெரிவித்துள்ளார்.

ஆர்க்டிக் பிராந்தியத்துக்கு வடக்கே உள்ள ரஷ்யாவின் மிகப்பெரிய நகரமான முர்மான்ஸ்க்குக்கு பயணம் மேற்கொண்ட விளாடிமிர் புதின், அங்கு நடந்த ரஷ்யாவின் ஆர்க்டிக் மன்றத்தில் பேசும்போது, "ஆர்க்டிக் பிராந்தியத்தில் புவிசார் அரசியல் போட்டி தீவிரமடைந்து வருகிறது. கிரீன்லாந்தை கைப்பற்றும் டொனால்ட் ட்ரம்பின் திட்டம் அதற்கு ஒரு முக்கிய உதாரணம்.

கிரீன்லாந்து தொடர்பான அமெரிக்காவின் திட்டங்கள் தீவிரமானவை. இந்தத் திட்டங்கள் ஆழமான வரலாற்று வேர்களைக் கொண்டுள்ளன. மேலும் அமெரிக்கா ஆர்க்டிக் பிராந்தியத்தில் அதன் புவிசார் மூலோபாய, ராணுவ, அரசியல் மற்றும் பொருளாதார நலன்களை முறையாகத் தொடரும் என்பது தெளிவாகிறது. அமெரிக்க வெளியுறவுக் கொள்கையில் ஏற்பட்டுள்ள குறிப்பிடத்தக்க மாற்றம் இது. கிரீன்லாந்தைப் பொறுத்தவரை இது இரண்டு குறிப்பிட்ட நாடுகளுக்கு இடையேயாது. இதற்கும் ரஷ்யாவுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை." என்று கூறினார்.

புதினின் இந்த உரை, சர்வதேச அளவில் முக்கிய பேசுபொருளாக மாறி இருக்கிறது. புவிசார் அரசியல் மற்றும் ராணுவ வல்லுநர்கள் இதை, ரஷ்யாவும் அமெரிக்காவும் நெருக்கமான உறவுகளை வளர்ப்பதற்கான முயற்சி என்கின்றனர்.

# சைபர் மோசடியில் ரூ.50 லட்சத்தை இழந்த முதிய தம்பதி தற்கொலை

**பெங்களூரு, மார்ச் 30-**

சைபர் மோசடியில் ரூ.50 லட்சத்தை இழந்த முதிய தம்பதி தற்கொலை செய்து கொண்டனர்.

கர்நாடக மாநிலம் பெலகாவி மாவட்டத்தில் உள்ள கானாபூர் பகுதியை சேர்ந்தவர் சந்தன் நாசரேத் (வயது 82). இவர் மராட்டிய அரசு தலைமை செயலகத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவர் ஆவார். இவரது மனைவி பிலேவியானா (வயது 79). இந்த தம்பதிக்கு குழந்தைகள் இல்லாத நிலையில், இருவரும் தனியாக வசித்து வந்தனர்.

இந்நிலையில், கடந்த வியாழக்கிழமை சந்தன் மற்றும் பிலேவியானா ஆகிய இருவரும் அவர்களது வீட்டில் சடலமாக கண்டெடுக்கப்பட்டனர். அவர்களின் வீட்டில் நடத்தப்பட்ட சோதனையில் 2 பக்க கடிதம் ஒன்று சிக்கியுள்ளது. அந்த கடிதத்தை சந்தன் எழுதியுள்ளார். சந்தன் தனது தற்கொலை கடிதத்தில் சுமித் என்ற நபர், சந்தனின் பெயரில் போலி சிம் கார்டு வாங்கப்பட்டு சட்டவிரோத நடவடிக்கைக்கு பயன்படுத்தப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டதாக கூறியுள்ளார்.

பின்னர் அனில் யாதவ் என்ற நபர் சி.பி.ஐ. அதிகாரி போல் பேசி சந்தனின் சொத்து விவரங்களை கேட்டுள்ளார். பின்னர் சந்தன் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாக கூறி மிரட்டியுள்ளார். இதனால் பயந்து போன சந்தன், மோசடிக்காரர்களின் வங்கி கணக்கிற்கு சுமார் ரூ.50 லட்சம் பணத்தை அனுப்பி வைத்துள்ளார். ஆனால் அவர்கள் மேலும் பணம் வேண்டும் என்று கேட்டுள்ளனர்.

இதற்காக சந்தன்-பிலேவியானா தம்பதியினர் தங்கள் நண்பர்கள் சிலரிடம் கடன் வாங்கியுள்ளனர். மேலும் கடந்த ஜூன் 4-ந் தேதி ரூ.7.15 லட்சத்திற்கு தங்க நகைக் கடன் வாங்கியதாக சந்தன் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். அந்த நகை விற்கப்பட்டு தங்கள் கடன்கள் அடைக்கப்பட வேண்டும் என்று சந்தன் கோரிக்கை விடுத்துள்ளார். அதோடு, தற்கொலைக்கு பிறகு தங்கள் உடல்களை மருத்துவ கல்லூரிக்கு தானமாக வழங்க வேண்டும் என்றும் சந்தன் குறிப்பிட்டுள்ளார்.

இந்த தற்கொலை கடிதத்தின் அடிப்படையிலும், முதற்கட்ட விசாரணையின் பேரிலும், போலீசார் சைபர் மோசடி மற்றும் தற்கொலைக்கு தூண்டுதல் ஆகிய பிரிவுகளின் கீழ் அமித் மற்றும் அனில் யாதவ் ஆகிய இரு நபர்களின் மீது வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தோடர் மக்களுடன் நடனமாடி மகிழ்ந்த டெல்லி கவர்னர்

**ஊட்டி, மார்ச் 30-**

கர்நாடகத்திற்குப் பயணம் மேற்கொண்ட டெல்லி துணைநிலை கவர்னர் வினைகுமார் சக்சேனா, உதகையில் பழங்குடி சமூகத்தினரான தோடர் மக்களுடன் நடனமாடி மகிழ்ந்தார்.

டெல்லி துணைநிலை கவர்னர் வினைகுமார் சக்சேனா உதகையில் உள்ள தோடர் பழங்குடி கிராமத்திற்கு நேற்று வருகை தந்திருந்தார். அங்கு அவர் மூங்கில் தோட்டத்தைத் திறந்துவைத்தார். பகல்கோடு மந்து பகுதிக்குச் சென்ற அவர் பழங்குடியினரின் உற்பத்தி பொருள்கள் வைக்கப்பட்ட அங்காடியைப் பார்வையிட்டார்.

அதன்பின்னர், துணைநிலை கவர்னர் தோடர் பழங்குடியின மக்களுடன் வட்டமாகச் சுற்றி வந்தும், கைத்தட்டிம் நடனமாடியும் மகிழ்ந்தார். இந்த விடியோ இணையதளத்தில் வைரலாக பரவி வருகின்றது. பின்னர், பைக்காரா படகு இல்லத்துக்குச் சென்று படகு சவாரி செய்தார்.

அதற்கடுத்து, நேற்று முன்தினம் மாலை முதுமலை புலிகள் காப்பகம் வந்த சக்சேனாவை, துணை இயக்குநர் வித்யா வரவேற்றார். தொடர்ந்து வனத்துறை வாகனத்தில் முதுமலை வனப்பகுதியில் சவாரி செய்து, தெப்பக்காடு வளர்ப்பு யானைகள் முகாமையும் அவர் சுற்றிப் பார்த்தார்.

# 9 இடங்களில் சதமடித்த வெயில்

**சென்னை, மார்ச் 30-**

தமிழ்நாட்டில் வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் இருக்கிறது. இந்த நிலையில் நேற்று முன்தினம் ஒரே நாளில் சென்னை உள்பட 9 இடங்களில் வெயில் சதமடித்தது. அதிகபட்சமாக வேலூரில் 105.62 டிகிரி வெயில் பதிவானது. வேலூர்- 105.62 டிகிரி (40.9 செல்சியஸ்), சேலம்- 103.28 டிகிரி (39.6 செல்சியஸ்), கரூர்- 103.1 டிகிரி (39.5 செல்சியஸ்), ஈரோடு- 102.56 டிகிரி (39.2 செல்சியஸ்), மதுரை விமான நிலையம்- 101.84 டிகிரி (38.8 செல்சியஸ்), திருச்சி- 101.48 டிகிரி (38.6 செல்சியஸ்), திருத்தணி- 101.3 டிகிரி (38.5 செல்சியஸ்), திருப்பத்தூர்- 100.4 டிகிரி (38 செல்சியஸ்), தர்மபுரி- 100.4 டிகிரி (38 செல்சியஸ்).

# பிரதமர் மோடி மிகவும் புத்திசாலி: அமெரிக்க அதிபர் டிரம்ப் கருத்து

**வாஷிங்டன், மார்ச் 30-**

பிரதமர் மோடி மிகவும் புத்திசாலி என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

இந்திய பிரதமர் மோடி மிகவும் புத்திசாலி என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் பாராட்டி உள்ளார். இதுகுறித்து வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களை சந்தித்த அமெரிக்க அதிபர் டெனால்ட் டிரம்ப், அடுத்தடுத்து வரி விதிப்புகள் தொடர்பான அறிவிப்புகளை வெளியிடுவது குறித்து பேசினார். அப்போது, இந்தியாவுடனான உறவு குறித்தும், வரி தொடர்பான பேச்சுவார்த்தை குறித்து அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இந்நிலையில், அதற்கு பதிலளித்து பேசிய டொனால்ட் டிரம்ப், "வரி தொடர்பாக இந்தியா மற்றும் அமெரிக்கா இடையே பேச்சுவார்த்தை நல்ல முறையில் நடந்தது. பிரதமர் மோடி மிகவும் புத்திசாலி. என்னுடைய நல்ல நண்பரும் கூட. நாங்கள் இது தொடர்பாக பேசினோம். இந்தியா மற்றும் அமெரிக்கா இடையே அனைத்தும் நல்ல முறையில் நடக்கும் என்று நினைக்கிறேன். சிறந்த பிரதமரை இந்தியா பெற்றுள்ளது." என்று தெரிவித்தார்

# பாம்பன் புதிய ரயில் பாலத்திற்கு அப்துல் கலாம் பெயர்: பிரேமலதா கோரிக்கை

**சென்னை, மார்ச் 30-**

பாம்பன் புதிய பாலத்திற்கு அப்துல்கலாம் பெயர் வைக்க வேண்டும் என்று பிரேமலதா கோரிக்கை விடுத்துள்ளார்.

தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:- ராமேசுவரத்தில் பாம்பன் புதிய ரெயில் பாலத்தை பிரதமர் நரேந்திர மோடி ஏப்ரல் 6-ந்தேதி திறந்து வைக்கிறார். வரலாற்று சிறப்புமிக்க இந்த பாம்பன் பாலத்திற்கு, ராமேசுவரத்தை பூர்வீகமாக கொண்டு பிறந்து, வளர்ந்து, அந்த மாவட்டத்திற்கே ஒரு அடையாளமாக இருக்கும் முன்னாள் ஜனாதிபதி ஏ.பி.ஜே அப்துல்கலாமின் பெயரை மத்திய அரசு சூட்ட வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மியான்மரில் மீண்டும் நிலநடுக்கம்; ஆப்கானிஸ்தானிலும் உணரப்பட்டது

**காபூல், மார்ச் 30-**

மியான்மரில் மீண்டும் மற்றொரு நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ஆப்கானிஸ்தானிலும் உணரப்பட்டது

ஆப்கானிஸ்தானில் நேற்று காலை 5.16 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டு உள்ளது. மித அளவிலான இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 4.7 ஆக பதிவாகி உள்ளது. இதனை தேசிய நிலநடுக்க அறிவியல் மையம் அறிவித்து உள்ளது. எனினும், இதனால் ஏற்பட்ட பொருளிழப்புகள் பற்றிய விவரங்கள் எதுவும் உடனடியாக வெளிவரவில்லை.

மியான்மர் மற்றும் தாய்லாந்தில் நேற்று முன்தினம் அடுத்தடுத்து கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது. இதில், மியான்மரில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்துக்கு ஆயிரத்திற்கும் அதிகமானோர் பலியாகி உள்ளனர். 1000 த்திற்க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்து உள்ளனர். மியான்மரில் நேற்று முன்தினம் இரவு 11.56 மணியளவில் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டரில் 4.2 ஆக பதிவாகி இருந்தது.

**30-03-2025**




**மேஷம்:-** இன்று, சமாளிக்க முடியாத செலவுகள் ஏற்படும். நண்பர்களுடன் சுமுகமாக இருந்தால் கருத்து வேறுபாடுகளை தவிர்க்கலாம். தொழிலில் புதிய முதலீடுகளை தவிர்க்கவும்.

**ரிஷபம்:-** இன்று ஆரோக்கிய நிலை சீராக இருக்கும். ஏதாவது ஒரு நினைவில் மனம் உழன்று கொண்டிருக்கும். பயண ஆர்வமும், சூழ்நிலை மாற்றத்தையும் விரும்புவீர்கள். சமூக சேவைக்கான எண்ணம் எழும்.

**மிதுனம்:-** தொழிலில் அதிக இலாப வரவால் தனலாபம் பெருகும்., நல் ஆரோக்கியமும் ஏற்படும். கல்வியில் முன்னேற்றத் தடைகள் ஏற்படலாம். இனிய பேச்சால் எல்லோரையும் கவர்வீர்கள்.

**கடகம்:-** இன்று, ஆராய்ச்சி மனப்பான்மையோடு செயல்படுவீர்கள். நண்பர்களின் தொடர்பு நலத்தையும் மகிழ்ச்சியையும் அளிக்கும். கடல் கடந்த விவகாரங்கள் வெற்றி அளிக்கும்.

**சிம்மம்:-** இன்று, கூட்டாளிகளால் இலாபம் இருக்காது. கதாநாயகனாக எண்ணிக் கொள்வதையும், தியாக மனப்பான்மையும் கைவிடுவது நல்லது. பெண்கள் வழக்குகளை சந்திக்க நேரலாம்.

**கன்னி:-** இன்று தங்கள் மனையாள் இனிய மாற்றங்களையும், இன்பப் பயணங்களையும் விரும்புவார். தன வருமானம் அதிகரிக்கும். உறவுகளை சந்திப்பதால் உற்சாகம் பெருகும்.

**துலாம்:-** இன்று விரும்பிய பொருட்கள் வீடு வந்து சேரும். வியாபாரப் பயணங்கள், நல்ல வாகன யோகம், நல்ல வருமானம் மற்றும் உறவுகளை சந்திப்பதில் மகிழ்ச்சி ஆகியவை ஏற்படும்.

**விருச்சிகம்:-** குழந்தைகளின் ஆரோக்கியக் குறைவினால் மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். மற்றவர்களுக்கு ஆலோசனை கூறுவது கூடாது. பயணங்களில் ஏற்படும் தடையால் அமைதியற்ற மனநிலையில் இருப்பார்கள்.

**தனுசு:-** இன்று, மனோபலம் அதிகரிக்கும். எல்லாவற்றிலும், அனைவரின் மீதும் ஒரு சந்தேக சூழல் நிலவும். ஆரோக்கியக் குறைவு, மனக் கவலைகள் ஏற்பட்டு குடும்ப வாழ்க்கையில் குதூகலம் குறையும்.

**மகரம்:-** இன்று குழந்தைகள் பால் பாச மழை பொழிவார்கள். எல்லாவற்றிலும் சுலபமாக வெற்றிகள் குவியும். பலவழிகளிலும் தன லாபம் அதிகரிக்கும். நண்பன், அருகாமை ஆனந்தம் தரும்.

**கும்பம்:-** இன்று மரியாதைக் குறைவு களால் மன உளைச்சல் ஏற்படலாம். அரசியல் மற்றும் பொது வாழ்க்கையில் சுமாரான ஆதாயம் அடைவீர்கள். மன விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும் என்று சொல்வதற்கில்லை.

**மீனம்:-** இன்று, பெற்றோர்களால் நன்மை பல பெறுவீர்கள். மணவாழ்க்கை மகிழ்ச்சிகரமானதாக அமையும். இடமாற்றங்கள் ஏற்படலாம். விவசாயம் மூலம் இலாபங்கள் இருக்கும். வாகன யோகம் உண்டு.

# மதுரையை சேர்ந்த 2 அமைச்சர்கள் வலுவாக இருந்தும் மதுரைக்கு என்ன செய்தார்கள்..?
### முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ கேள்வி



**மதுரை, மார்ச் 30-**

மதுரையில் 2 அமைச்சர்கள் வலுவாக உள்ளார்கள். ஆனால் மதுரைக்கு என்ன செய்தார்கள் என்று மதுரையில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ.தெரிவித்தார்.

மதுரை மேற்கு தொகுதிக்குட்பட்ட கொடிமங்கலம் புதூர் கிராமத்தில் ரூ.17.95 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கிராம சாவடி அமைப்பதற்கான பூமி பூஜையை முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, பா.குமார், எம்.எஸ்.கே.மல்லன், பரவை ராஜா, கு.திரவியம், வி.பி.ஆர்.செல்வகுமார், நீதிகாந்த், விநாயகமூர்த்தி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

பின்னர் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. நிருபர்களிடம் கூறியதாவது-100 நாள் வேலை திட்டத்தை 150 நாளாக உயர்த்துவோம் என்று திமுக தேர்தல் வாக்குறுதி அளித்தார்கள்.இப்போது மத்திய அரசு பணம் கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள்.கார் ரேஸ் நடத்துவதற்கும், பேனா வைப்பதற்கும் செலவழிக்கும் தொகையை ஏழை மக்களுக்கு செலவு செய்யலாம்.100 நாள் வேலை திட்டத்தில் பணம் வராதவர்கள் இன்று நடைபெறும் போராட்டத்தில் கலந்து கொண்டால் தான் பணம் வரும் என்று சொல்லி அழைத்துள்ளார்கள் .எப்படி உள்ளார்கள் பாருங்கள். திமுக என்றால் திமுக தான். திமுக அரசு மக்களை தொடர்ந்து ஏமாற்றி வருகிறது. மதுரை மேற்கு தொகுதியில் சாலை அமைப்பதற்கு ஒரு அமைச்சர் பூமி பூஜை செய்கிறார்.இனி வரும் காலங்களில் கழிவறைக்கு கூட பூமி பூஜை செய்வார்கள்.அமைச்சர் மூர்த்தி டிபன் பாக்ஸ் கொடுத்தாலும் சரி, தங்க கட்டி கொடுத்தாலும் சரி மக்களின் ஒருவன் நான் மக்களோடு மக்களாக இருக்கிறேன். நாடகம் போடுவது, வேஷம் போடுவது நீடிக்காது.மதுரையில் 2 அமைச்சர்கள் வலுவாக உள்ளார்கள். ஆனால் மதுரைக்கு என்ன செய்தார்கள்.

எதிர்கட்சிகள் ஆக்கப்பூர்வமாக செயல்படுங்கள் என முதலமைச்சர் சட்டப்பேரவையில் பேசியது குறித்த கேள்விக்கு,ஆடு நனையுது என்று ஓநாய் கவலைப்பட்ட கதையாக உள்ளது. முதலமைச்சர் ஏன் எங்களைப் பற்றி பேசுகிறார்? திமுக - வினர் அதிமுக மீது கரிசனம் காட்டுவது ஏமாற்று வேலை. திமுக வை விஜய் விமர்சிப்பது குறித்த கேள்விக்கு,நாங்கள் எந்த தவறும் செய்யவில்லை என்றும் மக்களோடு மக்களாக இருக்கின்றோம் என்பது தம்பி விஜய்க்கு தெரியும்.அதனால் தான் அவர் எங்களை சொல்லவில்லை.திமுக எப்படி வேஷம் போடுகிறது என்று நாங்கள் சொல்வதை தான் அவர் சொல்லியுள்ளார்.நிர்மலா சீதாராமன் - செங்கோட்டையன் சந்திப்பு குறித்த கேள்விக்கு,எதிரியாக இருந்தாலும் கூட பேசுவது தானே தமிழ்நாட்டின் கலாச்சாரம். நான் வரும் வழியில் கூட திமுக வினரை சந்தித்து பேசினேன். நிர்மலா சீதாராமன் தமிழ் தானே. மதுரையில் பிறந்தவர் தானே?அவரை சந்திப்பதில் என்ன தவறு?செங்கோட்டையன் எதார்த்தமாகவும், தற்செயலாகவும் சந்தித்து இருப்பார். இவ்வாறு அவர் கூறினார்.

# மனைவியை கொலை செய்த கணவருக்கு ஆயுள் தண்டனை: திருச்சி கோர்ட் தீர்ப்பு

**திருச்சி, மார்ச் 30-**

திருச்சியில் மனைவியை குழவிக்கல்லால் தாக்கி கொலை செய்த கணவருக்கு ஆயுள் தண்டனை மற்றும் ரூ.1000 அபராதம் விதித்து நீதிபதி தீர்ப்பு வழங்கினார்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், உப்பிலியபுரம் அருகே, கோணக்கரை கிராமத்தில் கடந்த 2024 ஜூன் 1-ம் தேதி அப்பகுதியைச் சேர்ந்த நடேசன் மகன் சிவக்குமார் (வயது54), தனது மனைவி செங்கொடி (வயது 43) நடத்தையில் சந்தேகப்பட்டு அவரை குழவிக்கல்லால் தாக்கி கொலை செய்தார். இது தொடர்பாக இறந்தவரின் மகன் சங்கேஸ்வரன் கொடுத்த புகாரின்பேரில், சிவக்குமார் மீது உப்பிலியபுரம் போலீசார் வழக்குப் பதிவு செய்தனர். அவ்வழக்கின் விசாரணை திருச்சி மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

நேற்று முன்தினம் அரசு தரப்பு வழக்கறிஞர் சவரிமுத்து ஆஜராகி வாதிட்ட நிலையில், திருச்சி முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்ற நீதிபதி கிறிஸ்டோபர் தீர்ப்பு வழங்கினார். அதில் குற்றவாளிக்கு ஆயுள் தண்டனையும், ரூ.1,000 அபராதமும் விதித்து அவர் உத்தரவிட்டார். இவ்வழக்கில் குற்றவாளிக்கு தண்டனை பெற்றுதந்தமைக்காக துறையூர் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் மற்றும் காவலர்களை திருச்சி மாவட்ட எஸ்.பி. செல்வநாகரத்தினம் பாராட்டினார்.

# ஈரோடு-செங்கோட்டை எக்ஸ்பிரஸ் ரயில் சேவையில் நாளை மாற்றம்

**ஈரோடு, மார்ச் 30-**

பராமரிப்பு பணிகள் காரணமாக ஈரோடு-செங்கோட்டை ரெயில் சேவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது

ஈரோடு மாவட்டம் பாசூர் ரெயில் நிலையம் பகுதியில் தண்டவாள பராமரிப்பு பணி நடக்கிறது. இதனால் நாளை (திங்கட்கிழமை) திருச்சி-ஈரோடு பயணிகள் ரெயில் (வண்டி எண் 56809) திருச்சியில் இருந்து காலை 7.20 மணிக்கு புறப்பட்டு கரூருடன் நிறுத்தப்படும். ஈரோட்டுக்கு இயக்கப்படாது.

இதுபோல் அன்று ஈரோடு-செங்கோட்டை எக்ஸ்பிரஸ் ரெயில் (வண்டி எண் 16845) ஈரோட்டில் இருந்து மதியம் 2 மணிக்கு புறப்படுவதற்கு பதில், கரூரில் இருந்து மதியம் 3.05 மணிக்கு புறப்படும். ஈரோட்டில் இருந்து இயங்காது. மேலும் மறு மார்க்கத்தில் செங்கோட்டை-ஈரோடு எக்ஸ்பிரஸ் ரெயில் (வண்டி எண் 16846) செங்கோட்டையில் அன்று அதிகாலை 5.10 மணிக்கு புறப்பட்டு, கரூர் ரெயில் நிலையத்தில் நிறுத்தப்படும். ஈரோட்டுக்கு வராது. இந்த தகவல் சேலம் ரெயில்வே கோட்டம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இங்கிலாந்து மன்னர் சார்லஸ் மருத்துவமனையில் அனுமதி

**லண்டன், மார்ச் 30-**

இங்கிலாந்து நாட்டின் மன்னர் சார்லஸ் பரிசோதனைக்காக தலைநகர் லண்டனில் உள்ள ஒரு தனியார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

இங்கிலாந்து நாட்டின் மன்னர் சார்லஸ் (வயது 76). கடந்த ஆண்டு இவருக்கு புற்றுநோய் பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டது. அதன்பிறகு அவரது உடல்நிலை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. இந்தநிலையில் புற்றுநோயின் பாதிப்பு தீவிரமடைந்தது.

எனவே பரிசோதனைக்காக அவர் தலைநகர் லண்டனில் உள்ள ஒரு தனியார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். இதனால் அவர் கலந்து கொள்ளவிருந்த அனைத்து நிகழ்ச்சிகளும் ரத்து செய்யப்பட்டன. பின்னர் ஆஸ்பத்திரியில் நடைபெற்ற பரிசோதனைக்கு பிறகு அவர் வீடு திரும்பினார். எனினும் தொடர்ந்து அவர் ஓய்வு எடுக்க டாக்டர்கள் அறிவுறுத்தி உள்ளனர்.

முன்னதாக இதே ஆஸ்பத்திரியில் சார்லசின் மருமகளும், இளவரசியுமான கேத்துக்கு கடந்த வாரம் இங்கு ஆபரேசன் நடைபெற்றது. புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள அவர் கடந்த 6 மாதங்களுக்கும் மேலாக பொதுப்பணியில் இருந்து ஒதுங்கி ஓய்வு எடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

# மணிப்பூரில் நிலநடுக்கம்

**இம்பால், மார்ச் 30-**

மணிப்பூரில் நிலநடுக்கம் 3.8 ரிக்டர் அளவில் பதிவானதாக தகவல் வெளியாகியுள்ளது.

மணிப்பூரில் நேற்று மதியம் திடீர் நிலநடுக்கம் ஏற்பட்டது. மதியம் 2.31 மணியளவில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 3.8 ஆக பதிவானதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது. 10 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், 24.90 டிகிரி வடக்கு அட்சரேகையிலும், 93.59 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் வெளியாகவில்லை.

# 100 நாள் வேலை திட்டத்தை ஒழிக்க நினைக்கிறது பா.ஜ.க.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தாக்கு

சென்னை, மார்ச் 30-

காந்தியைப் பிடிக்காதவர்களுக்கு அவர் பெயரிலான நூறு நாள் வேலைத் திட்டத்தையும் பிடிக்கவில்லை என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மத்திய அரசை சாடியுள்ளார். மேலும், 100 நாள் வேலைத் திட்டத்தை ஒழித்துக்கட்டும் வேலையில் பா.ஜ.க. இறங்கியிருக்கிறது என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "காந்தியைப் பிடிக்காதவர்களுக்கு அவர் பெயரிலான நூறு நாள் வேலைத் திட்டத்தையும் பிடிக்கவில்லை. இந்தியக் கிராமப்புறப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக, ரத்த ஓட்டமாக வளர்த்தெடுக்கப்பட்ட மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டம் மீது சம்மட்டி கொண்டு அடித்து ஒரேயடியாக ஒழித்துக்கட்டும் வேலையில் இறங்கியிருக்கிறது இரக்கமற்ற பா.ஜ.க. அரசு.

உங்களுக்கு வேண்டப்பட்ட கார்ப்பரேட்டுகள் என்றால் பல லட்சம் கோடி ரூபாய்க் கடனைக் கூட ஒரே கையெழுத்தில் தள்ளுபடி செய்கிறீர்களே? வேகாத வெயிலில் உடலை வருத்தி, வியர்வை சிந்தி உழைத்த ஏழைகளின் சம்பளப் பணத்தை விடுவிக்க மட்டும் ஏன் பணமில்லை? பணமில்லையா அல்லது மனமில்லையா? தமிழ்நாடெங்கும் (நேற்று) ஆர்ப்பாட்டத்தில் கழக உடன்பிறப்புகளும் ஏழை மக்களும் எழுப்பும் குரல் டெல்லியை எட்டட்டும். பா.ஜ.க. அரசின் மனம் இரங்கட்டும் எனப் பதிவிட்டுள்ளார்.

## அ.தி.மு.க.வுடன் பா.ஜ.க. கூட்டணியா? உள்துறை அமைச்சர் அமித்ஷா தகவல்

புதுடெல்லி, மார்ச் 30-

அ.தி.மு.க.வுடன் பா.ஜ. கூட்டணியா என்பது குறித்து உள்துறை அமைச்சர் அமித்ஷா கூறியுள்ளார்.

டெல்லியில் தனியார் தொலைக்காட்சி நிறுவனம் நடத்திய நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய அமித்ஷா கூறியதாவது: தென்னிந்தியாவில் மிகவும் முற்போக்கான மாநிலமாகக் கருதப்பட்ட தமிழ்நாடு, தற்போது திமுக அரசின் கொள்கையால் குழப்பத்திற்கு ஆளாகியுள்ளது.தாய்மொழியில் கல்வி பயில்வதை ஊக்குவிக்கும் தேசிய கல்விக்கொள்கையையும், மருத்துவம், பொறியல் உள்ளிட்ட படிப்புகளை தமிழ்மொழியில் கற்பிப்பது குறித்தும் திமுகவிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. ஆனால், அவர்கள் அதை தொடங்கவும் இல்லை . தொகுதி மறுசீரமைப்பு விஷயத்தில் யாருக்கும் எந்த அநீதியும் செய்யப்படாது. அதற்கு, 0.0001 சதவீதம் கூட அநீதி நடக்க வாய்ப்பு இல்லை. அ.தி.மு.க.வு.டனான கூட்டணி குறித்த பேச்சுவார்த்தை சரியான நேரம் வரும்போது, அதை தெரியப்படுத்துவோம் என்றார்.

## நிலநடுக்கத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட மியான்மர் ராணுவ ஜெனரலிடம் விவரங்களை கேட்டறிந்த பிரதமர்

புதுடெல்லி, மார்ச் 30-

மியான்மர் ராணுவ ஜெனரலிடம் பிரதமர் மோடி பேசினார்.

மியான்மர், தாய்லாந்து ஆகிய நாடுகளில் நேற்று முன்தினம் அடுத்தடுத்து பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 7.7 மற்றும் 6.4 ஆக பதிவான நிலையில், நிலநடுக்கத்தால் கட்டிடங்கள் இடிந்து விழுந்து பெரும் சேதம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கத்தில் மியான்மரில் சுமார் ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது. மேலும் இடிபாடுகளுக்குள் பலர் சிக்கியுள்ளதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்க கூடும் என அஞ்சப்படுகிறது. அதே சமயம், மீட்புப் பணிகள் தற்போது துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், மியான்மர் அரசின் தலைவரும், ராணுவ ஜெனரலுமான மின் ஆங் ஹிலாங்கிடம் பிரதமர் மோடி பேசியுள்ளார். இது குறித்து 'எக்ஸ்' தளத்தில் பிரதமர் மோடி வெளியிட்டுள்ள பதிவில், நிலநடுக்கத்தால் ஏற்பட்ட உயிரிழப்புகளுக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்ததாகவும், இந்த கடினமான நேரத்தில் மியான்மர் மக்களுக்கு இந்தியா உறுதுணையாக நிற்கும் என்றும் தெரிவித்ததாக அவர் கூறியுள்ளார்.

மேலும் ஆபரேஷன் பிரம்மா' மூலம் இந்தியா சார்பில் மியான்மர் மக்களுக்கு தேவையான நிவாரண பொருட்கள், மனிதாபிமான உதவிகள் மற்றும் பேரிடர் மீட்புக் குழுக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். இதன்படி மியான்மருக்கு இதுவரை சுமார் 15 டன் நிவாரண பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## அடுத்த தமிழ்நாடு முதல்வர் யார்?

# புதிய கருத்துக்கணிப்பில் முந்திய தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின்

புதுடெல்லி,

அடுத்த தமிழ்நாடு முதல்வர் யார் என்பது குறித்த கருத்துக்கணிப்பில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் முதலிடம் பிடித்துள்ளார்.

தமிழ்நாட்டில் அடுத்த முதல்வர் யார் என்பது குறித்து சி வோட்டர் நிறுவனம் இந்தியா டுடே நிறுவனத்துடன் இணைந்து கருத்துக் கணிப்பு நடத்தி அதன் முடிவுகளை வெளியிட்டுள்ளது. அந்த கருத்து கணிப்பின்படி தற்போதைய தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் 2026-ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலிலும் முதல்வராக தேர்ந்தெடுக்கப்படுவார் என்று 27 சதவீத மக்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்த கருத்துக்கணிப்பில் தமிழ்நாடு அரசின் செயல்பாடு எவ்வாறு இருக்கிறது..? என்பது குறித்தும் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு தமிழ்நாடு அரசின் செயல்பாடு மிகவும் திருப்தியாக உள்ளது என 15 சதவீதம் பேர் கருத்து தெரிவித்துள்ளனர். ஆளும் தி.மு.க. அரசின் ஆட்சி ஓரளவு திருப்தியாக உள்ளது என 36 சதவீதம் பேர் கூறியுள்ளனர்.

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் செயல்பாடு எவ்வாறு இருக்கிறது என கேட்கப்பட்டதற்கு 22 சதவீதம் பேர் "நன்றாக உள்ளது" என்றும், 33 சதவீதம் பேர் "ஓரளவுக்கு திருப்தி" என்றும் தெரிவித்தனர். இதற்கிடையில், 22 சதவீதம் பேர் "எந்த விதத்திலும் திருப்தி அடையவில்லை" என்றும், 23 சதவீதம் பேர் எந்த முடிவும் எடுக்கவில்லை என்றும் தெரிவித்தனர். ஸ்டாலின் மிகவும் விரும்பப்படும் தலைவராக இருந்தாலும், அவரது ஆட்சியில் பொதுமக்களின் திருப்தி கலவையாக இருப்பதை இது காட்டுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினின் தலைமைக்கு வலுவான விருப்பம் இருப்பதாக இந்த கருத்து கணிப்பு முடிவுகள் குறிப்பிடுகின்றன, அவருக்கான மதிப்பீடு மற்ற போட்டியாளர்களை விட கணிசமான அளவில் முன்னிலையில் உள்ளது.

தங்கள் வாக்குகளைப் பாதிக்கும் மிக முக்கியமான பிரச்சினைகள் குறித்து கேட்டபோது, பதிலளித்தவர்கள் பெண்களின் பாதுகாப்பை 15 சதவீதம் பேர் முக்கிய கவலையாக குறிப்பிட்டனர், அதைத் தொடர்ந்து 12 சதவீதம் பேர் விலைவாசி உயர்வு. 10 சதவீத வாக்காளர்கள் போதைப்பொருள் மற்றும் மது அருந்துதல் ஒரு முக்கிய பிரச்சினையாக அடையாளம் காட்டி உள்ளனர். அதே நேரத்தில் வேலையின்மை 8 சதவீதம் பேர் மேற்கோள் காட்டினர்.

சட்டமன்ற உறுப்பினர்களின் செயல்திறன் குறித்த பொதுமக்களின் கருத்தும் இதேபோல் பிரிக்கப்பட்டது. பதிலளித்தவர்களில் 16 சதவீதம் பேர் தங்கள் சட்டமன்ற உறுப்பினர்களுடன் "மிகவும் திருப்தி அடைவதாகக்" கூறியுள்ளனர்.

தமிழக அரசியலில் மு.க.ஸ்டாலின் ஆதிக்கம் செலுத்தும் தலைவராக இருந்தாலும், ஆட்சி குறித்த பொதுமக்களின் கவலைகள் அதிகரித்து வருவதும், தீவிர போட்டியாளராக விஜய் எதிர்பாராத விதமாக உயர்ந்திருப்பதும், 2026 சட்டமன்றத் தேர்தலில் மாநில அரசியல் சூழலை மாற்றியமைக்கக்கூடும் என்று கணக்கெடுப்பு முடிவுகள் தெரிவிக்கின்றன.

## ஸ்ரீவைகுண்டம் அருகே

## தாமிரபரணி ஆற்றில் மூழ்கி 5 வயது குழந்தை உட்பட இருவர் உயிரிழப்பு

தூத்துக்குடி, மார்ச் 30-

ஸ்ரீவைகுண்டம் அருகே தாமிரபரணி ஆற்றில் மூழ்கி 5 வயது குழந்தை உட்பட இருவர் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. தூத்துக்குடி மாவட்டம் நாசரேத் அருகே உள்ள ஒய்யாங்குடி கிராமத்தைச் சேர்ந்தவர் லாரன்ஸ். மேட்டுப்பாளையத்தில் பேன்சி ஸ்டோர் வைத்துள்ள லாரன்ஸ் அங்கு குடும்பத்தினருடன் வசித்து வருகிறார். ஒய்யாங்குடி பகுதியில் நடைபெற்ற கோவில் திருவிழாவில் கலந்து கொள்வதற்காக லாரன்ஸ் குடும்பத்தினருடன் வந்துள்ளார். இந்த நிலையில் நேற்று குடும்பத்தினருடன் தென்திருப்பேரையில் தாமிரபரணி ஆற்றில் குளிப்பதற்காக சென்றுள்ளார். ஆற்றில் குளித்துக் கொண்டிருந்தபோது, லாரன்சின் மனைவி கிளாடிஸ் மற்றும் கிளாடிசின் தங்கை மகள் அவினா (5 வயது) இருவரும் ஆழமான பகுதிக்கு சென்றுள்ளனர். திடீரென இருவரும் நீரில் மூழ்கி தத்தளித்தனர்.

இதையடுத்து அவர்களை அருகில் இருந்தவர்கள் மீட்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவர்களை பரிசோதித்த மருத்துவர்கள் இருவரும் உயிரிழந்து விட்டதாக தெரிவித்தனர். இந்த சம்பவம் தொடர்பாக ஆழ்வார்திருநகரி போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## யுகாதி பண்டிகை: இ.பி.எஸ். வாழ்த்து

சென்னை, மார்ச் 30-

யுகாதி பண்டிகையை உற்சாகத்துடன் கொண்டாட எடப்பாடி பழனிசாமி வாழ்த்து தெரிவித்துள்ளார்

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், `யுகாதி' என்னும் புத்தாண்டுத் திருநாளை உற்சாகத்துடன் கொண்டாடி மகிழும்,

தெலுங்கு மற்றும் கன்னட மொழி பேசும் மக்கள் அனைவருக்கும் எனது யுகாதி திருநாள் நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

தெலுங்கு மற்றும் கன்னட மக்கள், தாங்கள் பேசும் மொழி வேறுபட்டிருந்தாலும், வாழும் இடம் ஒன்று என்ற உணர்வுடன் தமிழகத்தில் பலநூறு ஆண்டுகளாய் ஒருமித்து வாழ்ந்து வருவதும், ஒருவரோடு ஒருவர் நல்லுறவைப் பேணி, ஒற்றுமையுடன் வாழ்ந்து வருவது மான செயல், தமிழ் மண்ணுக்கும், தமிழ் மக்களுக்கும் பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளது.

இவ்வண்ணம் தமிழ் மக்களோடு ஒன்றி, உறவாடி, உவகையுற வாழ்ந்து வரும் தெலுங்கு மற்றும் கன்னட மொழி பேசும் மக்கள் அனைவரும் இந்தப் புத்தாண்டில் மேற்கொள்ளும் புதிய முயற்சிகளில் எல்லாம் வெற்றி பெற்று சீரோடும், சிறப்போடும் வாழ்ந்திட வேண்டும் என்று மனதார வாழ்த்துகிறேன் என தெரிவித்துள்ளார் .

## ஏ.டி.எம்-ல் பணம் எடுப்பதற்கான கட்டணம் இனி மேலும் உயர்வு

புதுடெல்லி, மார்ச் 30-

மே மாதம் 1-ந் தேதி முதல் ஏ.டி.எம்-ல் பணம் எடுப்பதற்கான கட்டண உயர்வு அமலுக்கு வரும் என ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது. வங்களில் கணக்கு வைத்திருப்பவர்கள் ஏ.டி.எம். எந்திரத்தை பயன்படுத்த சில கட்டுப்பாடுகள் உள்ளன. அதன்படி ஏ.டி.எம். கார்டு மூலம் பணம் எடுப்பது, ஸ்டேட்மென்ட் எடுப்பது உள்ளிட்ட தேவைகளுக்கு ஏ.டி.எம். எந்திரத்தை ஒரு மாதத்துக்கு 5 முறை இலவசமாக பயன்படுத்திக்கொள்ளலாம். அதற்கு மேல் ஏ.டி.எம்-ஐ பயன்படுத்தும் ஒவ்வொரு முறையும் வங்கிகள் தங்களது வாடிக்கையாளர்களிடம் இருந்து கட்டணம் வசூலிக்கும்.

அதன்படி இதுவரை இலவச பரிவர்த்தனை வரம்பை முடித்த பிறகு, மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு பரிவர்த்தனைக்கும் தலா ரூ.21-ஐ கட்டணமாக வங்கிகள் வசூலித்து வந்தன. தற்போது இந்த கட்டணம் ரூ.23 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த கட்டண உயர்வு மே மாதம் 1-ந் தேதி முதல் அமலுக்கு வரும் என ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.

## அ.தி.மு.க. தான் பிரதான எதிர்க்கட்சி: எடப்பாடி பழனிசாமி திட்டவட்டம்

சென்னை, மார்ச் 30-

அ.தி.மு.க. தான் பிரதான எதிர்க்கட்சி, த.வெ.க. தொண்டர்களை உற்சாகப்படுத்தவே விஜய் அவ்வாறு பேசியுள்ளார் என்று எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் பொதுக்குழு கூட்டம், சென்னை திருவான்மியூரில் உள்ள தனியார் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடந்தது. இந்த கூட்டத்தில் பேசிய விஜய், "2026-ம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் த.வெ.க. தி.மு.க. நடுவில் தான் போட்டி என்று கூறியிருந்தார்.

இந்த நிலையில் சேலத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமியிடம் விஜய்யின் பேச்சு குறித்து கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர் கூறியதாவது:-

நாட்டில் எல்லா கட்சித் தலைவர்களும், கட்சி வளர்வதற்காகவும், தொண்டர்களை உற்சாகப்படுத்தவும் அவ்வாறு கருத்து சொல்வார்கள். அ.தி.மு.க.வை பிரதான எதிர்க்கட்சி என்று மக்கள் ஒத்துக் கொண்டுள்ளனர். அதற்கான அங்கீகாரமும் கொடுத்துள்ளனர். இவ்வாறு கூறினார். தொடர்ந்து த.வெ.க. பொதுக்குழு கூட்டத்தில் பா.ஜ.க., தி.மு.க.வை கடுமையாக விமர்சனம் செய்தனர். ஆனால் அ.தி.மு.க.வை பற்றி பேசவில்லை. மேலும் அ.தி.மு.க. தலைவர்களை பெருமையாக பேசியுள்ளனர். இதுகுறித்து என்ன நினைக்கிறீர்கள் என்று கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த எடப்பாடி பழனிசாமி, "எங்கள் தலைவர்கள் அப்படி இந்த நாட்டை ஆண்டிருக்கிறார்கள். எதிர்க்கட்சியில் இருப்பவர்கள், புதிதாக கட்சி தொடங்குகிறவர்கள் எல்லாரும் எப்படி நடக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர்கள் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா" என்று கூறினார்.

# செங்கோட்டையன் திடீர் டெல்லி பயணம்

சென்னை, மார்ச் 30-

பரபரப்பான அரசியல் சூழலுக்கிடையே அ.தி.மு.க .முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் திடீரென டெல்லிக்கு பயணம் மேற்கொண்டுள்ளார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி சில தினங்களுக்கு முன் டெல்லி சென்று உள்துறை அமைச்சர் அமித் ஷாவை சந்தித்த நிலையில் செங்கோட்டையன் திடீர் பயணம் மேற்கொண்டுள்ளார். டெல்லியில் மத்திய நிதிமந்திரி நிர்மலா சீதாராமனை செங்கோட்டையன் சந்தித்து பேசியதாக தகவல் வெளியாகி உள்ளது.

முன்னதாக அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி மற்றும் முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் இடையே கருத்து வேறுபாடு எழுந்தன. இதனைத்தொடர்ந்து எடப்பாடி பழனிசாமி பங்கேற்ற நிகழ்ச்சிகளில் செங்கோட்டையன் பங்கேற்காமல் தவிர்த்து வந்தார். அதேபோல் எடப்பாடி பழனிசாமி பெயரையும் கூறாமல் இருந்தார்.

இந்த நிலையில் சில நாட்களுக்கு முன் எடப்பாடி பழனிசாமி டெல்லிக்கு பயணம் மேற்கொண்டார். அ.தி.மு.க. அலுவலகத்தை பார்ப்பதற்காக டெல்லிக்கு சென்றதாக கூறிய அவர், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை சந்தித்தார். அவருடன் சி.வி. சண்முகம், கே.பி. முனுசாமி, தம்பிதுரை உள்ளிட்ட நிர்வாகிகளும் இருந்தனர். இதனால் 2026 சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி அமையும் என்று பார்க்கப்படுகிறது.

அ.தி.மு.க. - பா.ஜ.க. ஆகிய இரு தரப்பும் இதனை உறுதி செய்யாத நிலையில், செங்கோட்டையன், திடீரென டெல்லிக்கு பயணம் மேற்கொண்டார். அவர் மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமனை சந்தித்தாக தகவல் வெளியாகி உள்ளது.

## காவலர் அடித்துக்கொல்லப்பட்ட வழக்கு:

# தேடப்பட்ட நபர் என்கவுண்டர்

உசிலம்பட்டி, மார்ச் 30-

உசிலம்பட்டி காவலர் படுகொலை வழக்கில் குற்றவாளி பொன்வண்ணன் போலீசாரால் என்கவுண்டர் செய்யப்பட்டுள்ளார்.

உசிலம்பட்டி காவல் ஆய்வாளரின் ஓட்டுநரான, கள்ளபட்டியைச் சேர்ந்த முதல் நிலை போலீஸ்காரரான முத்துக்குமார் (40), இவர் கடந்த 27-ம் தேதி பணி முடிந்து முத்தையன்பட்டியில் உள்ள டாஸ்மாக் கடையில் மது அருந்தும் போது, அங்கே மது அருந்திக் கொண்டிருந்த கஞ்சா வியாபாரி பொன்வண்ணனுக்கு அறிவுரை செய்துள்ளார். இதனால் இருவர் இடையே தகராறு ஏற்பட்டதாக கூறப்படுகிறது. பின் அங்கிருந்து வெளியே வந்த முத்துக்குமார், கள்ளபட்டியைச் சேர்ந்த ராஜாராம் என்பவருடன் அருகில் உள்ள தோட்டத்திற்கு வந்துள்ளார்.

அப்போது அடையாளம் தெரியாத சிலர், பின்னால் வந்து முத்துகுமாரை கல்லால் தாக்கி உள்ளனர். இதனால் தலையில் பலத்த காயம் அடைந்த அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அவருடன் உடனிருந்த ராஜாராம் என்பவரும் இந்த தாக்குதலில் படுகாயமடைந்த நிலையில், அவருக்கு உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதையடுத்து காவலர் முத்துகுமாரை கல்லால் அடித்து கொலை செய்தது கஞ்சா வியாபாரி பொன்வண்ணன் என்பது போலீசார் விசாரணையில் தெரிய வந்தது.

தொடர்ந்து கொலை வழக்கில் பொன்வண்ணனை பிடிக்க தனிப்படை அமைத்து போலீசார் தேடி வந்தனர். அப்போது அவர் தேனி மாவட்டம் கம்பம் வனப்பகுதியில் இருப்பதாக வந்த தகவலை அடுத்து அவரை கைது செய்ய போலீசார் அங்கு சென்றனர். அப்போது கைது செய்ய சென்ற போலீசாரை பொன்வண்ணன் தாக்கியதாக கூறப்படுகிறது.

இதன் காரணமாக உசிலம்பட்டி நகர ஆய்வாளர் ஆனந்தன், பொன்வண்ணனை என்கவுண்டர் செய்ததாக கூறப்படுகிறது.

## அவர் தவழ்கின்ற குழந்தை:

## விஜய்க்கு அமைச்சர் சேகர்பாபு பதிலடி

சென்னை, மார்ச் 30-

விஜய் பேச்சுக்கு அமைச்சர் சேகர்பாபு பதிலடி கொடுத்து பேசியுள்ளார்.

நடிகர் விஜய் கடந்த ஆண்டு தமிழக வெற்றிக் கழகம் என்ற புதிய அரசியல் கட்சியை தொடங்கினார். தொடர்ந்து மாநில மாநாடு, நிர்வாகிகள் நியமனம் ஆகியவற்றை நடத்தி கட்சியை வலுப்படுத்தினார். அடுத்த ஆண்டு நடைபெறும் சட்டமன்ற தேர்தலில் களம் இறங்குவதற்கு ஆயத்தமாகி வருகிறார். இந்தநிலையில் தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் பொதுக்குழு கூட்டம், சென்னை திருவான்மியூரில் உள்ள தனியார் மண்டபத்தில் நடந்தது.

இந்த கூட்டத்தில் பேசிய கட்சியின் தலைவர் விஜய், இன்று தமிழ்நாடு இருக்கும் சூழலில் நாம் ஒரு புதிய வரலாற்றை படைப்பதற்கு தயாராக வேண்டிய அவசியத்தை நீங்கள் எல்லாரும் நன்றாக புரிந்து வைத்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். ஒவ்வொரு குடும்பமும் நன்றாக வாழ வேண்டும் என்று நினைப்பது அரசியலா? இல்லை, ஒரே ஒரு குடும்பம் மட்டும் தமிழ்நாட்டை சுரண்டி நல்லா வாழ வேண்டும் என்பது அரசியலா

மன்னராட்சி முதல்வரே, உங்கள் ஆட்சியை பற்றி கேட்டால், உங்களுக்கு ஏன் இவ்வளவு கோபம் வருகிறது. நீங்கள் ஒழுங்காக ஆட்சி நடத்தி இருந்தால் பெண்கள் பாதுகாப்பு ஒழுங்காக இருந்திருக்கும். சட்டம்-ஒழுங்கு சரியாக இருந்திருக்கும். படிக்கிற பிள்ளைகள், சின்னப் பொண்ணுங்க, வேலைக்கு போகிற பொண்ணுங்க, வீட்டில் இருக்கிற பொண்ணுங்க என்று இவர்கள் எல்லாருக்கும் நடக்கிற கொடுமைகளை சொல்ல முடியவில்லை சார்.

இந்தநிலையில் உங்களை அப்பா என்று கூப்பிடுவதாக சொல்கிறீர்கள். தினம் தினம் கொடுமைகளை அனுபவித்துக்கொண்டிருக்கிற தமிழ்நாட்டு பெண்கள் தான் உங்களின் ஆட்சிக்கு முடிவு கட்ட போகிறார்கள். உங்களின் அரசியல் வாழ்க்கைக்கே ஒரு முடிவு கட்டப் போகிறார்கள். என்று அவர் கூறியிருந்தார்.

இந்நிலையில் இதுதொடர்பாக செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய அமைச்சர் சேகர்பாபு, மன்னராட்சி காத்த கரங்கள், மக்களாட்சி காணும் எங்கள் நெஞ்சம். எங்களாட்சி என்றும் ஆளும். சக்திமயமான இந்த ஆட்சியை எந்த சக்தியாலும் அகற்ற முடியாது. பெண்கள் தான் 2026-ஆம் ஆண்டு இந்த ஆட்சியை தூக்கி பிடிப்பார்கள். முதல்வரை வரவேற்பதில் 80 சதவீதம் பெண்கள் தான் உள்ளனர். த.வெ.க. தலைவர் விஜய், ஒரு தவழ்கின்ற குழந்தை. நாங்கள் பி.டி.உஷா போன்று பல்வேறு ஓட்டப்பந்தயங்களில் பங்கேற்று வென்றவர்கள் என்று அவர் கூறினார்.

## துணை முதல்வர் பெயரை தவறாக பயன்படுத்தி மோசடி: பெண் கைது

சென்னை, மார்ச் 30-

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பெயரை தவறாக பயன்படுத்து மோசடியில் ஈடுப்பட்ட பெண்ணை போலீசார் கைது செய்தனர்.;

அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி ஒருவரிடம் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பெயரை தவறாக பயன்படுத்து வேலை வாங்கித் தருவதாக கூறி பெண் ஒருவர் மோசடியில் ஈடுபட்டுள்ளார். இந்த மோசடியில் ஏமாற்றப்பட்ட மாற்றுத்திறனாளி போலீசில் புகார் அளித்தார். இது குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார் சேலத்தை சேர்ந்த வித்யா என்ற பெண்ணை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## நீட் தேர்வு அச்சம்:

# சென்னை மாணவி தற்கொலை

சென்னை, மார்ச் 30-

நீட் தேர்வுக்கு பயந்து சென்னை மாணவி தற்கொலை செய்து கொண்டார்.

நாடு முழுவதும் அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ்., படிப்புகள், சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஓமியோபதி படிப்புகள் மற்றும் கால்நடை மருத்துவப் படிப்பின் அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்களுக்கு தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு (நீட்) மூலம் மாணவர் சேர்க்கை நடத்தப்படுகிறது.

தேசிய தேர்வுகள் முகமை சார்பில் ஆண்டுதோறும் நீட் தேர்வு நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி 2025-26ம் கல்வியாண்டு சேர்க்கைக்கான நீட் தேர்வு வருகிற மே மாதம் 4-ம் தேதி நாடு முழுவதும் நடைபெற உள்ளது. இதனிடையே நீட் தேர்வுக்கு தயாராகி வரும் மாணவர்கள் தேர்வு அழுத்தம் மற்றும் அச்சம் காரணமாக தற்கொலை செய்யும் சோக சம்பவங்களும் அரங்கேறி வருகிறது.

இந்த நிலையில் சென்னை கிளாம்பாக்கத்தில் நீட் தேர்வுக்கு தயாராகி கொண்டிருந்த மாணவி தேர்வு அச்சம் காரணமாக தூக்குபோட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சென்னை கிளாம்பாக்கத்தைச் சேர்ந்தவர் தர்ஷினி. இவர் கடந்த 2021-ம் ஆண்டு முதல் 2 முறை நீட் தேர்வு எழுதியுள்ளார். ஆனாலும் அவருக்கு கட் ஆப் மதிப்பெண்கள் கிடைக்கவில்லை. இந்த நிலையில் சென்னை அண்ணாநகரில் உள்ள தனியார் அகாடமியில் பயின்று வந்த தர்ஷினி, வருகிற மே மாதம் நடைபெற உள்ள நீட் தேர்வுக்கு விண்ணப்பம் செய்து தயாராகி வந்தார். இந்த சூழலில் தேர்வுக்கு படித்துக் கொண்டிருந்த தர்ஷினி, தேர்வு அச்சம் காரணமாக தனது அறையில் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இந்த சம்பவம் தொடர்பாக கிளாம்பாக்கம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கவுன்ட்டரில் எடுத்த ரெயில் டிக்கெட்டை இனி ஆன்லைன் மூலம் ரத்து செய்யலாம்


## மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தகவல்

புதுடெல்லி, மார்ச் 30-

கவுன்ட்டரில் எடுத்த ரெயில் டிக்கெட்டை ஆன்லைன் மூலம் ரத்து செய்யலாம் என்று அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.


டிக்கெட் கவுன்ட்டரில் காத்திருப்போர் பட்டியல் டிக்கெட்டை வாங்கியவர்கள், இருக்கை உறுதியாகாத நிலையில் ரெயில் புறப்படுவதற்கு முன்பாக டிக்கெட் கவுன்ட்டருக்கு சென்று ரத்து செய்யவேண்டிய நிலை குறித்து மாநிலங்களவையில் பா.ஜ.க. எம்.பி. மேதா விஷ்ரம் குல்கர்னி கேள்வி எழுப்பினார். இந்த கேள்விக்கு பதிலளித்த ரெயில்வே மந்திரி அஸ்வினி வைஷ்ணவ், ரெயில் நிலைய டிக்கெட் கவுன்ட்டர்களில் எடுத்த டிக்கெட்டை ஆன்லைன் மூலம் ரத்து செய்யலாம் என்று தெரிவித்தார். ஐ.ஆர்.சி.டி.சி. இணையதளம் அல்லது 139 எண்ணுக்கு அழைத்து கவுன்ட்டர்களில் எடுத்த டிக்கெட்டுகளை ரத்து செய்யலாம் எனக்கூறிய அஸ்வினி வைஷ்ணவ், ரத்து செய்த அசல் டிக்கெட்டை முன்பதிவு கவுண்ட்டரில் செலுத்தி பணத்தை பெற்றுக்கொள்ளலாம் என்றும் கூறினார்.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....




நீட் தற்கொலைகளுக்கு மத்திய, மாநில அரசுகள் தான் பொறுப்பேற்க வேண்டும். மாணவச் செல்வங்களைக் காக்க நீட் தேர்வை ரத்து செய்ய மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்கொலை செய்து கொண்ட மாணவி தர்ஷினியின் குடும்பத்திற்கு தமிழக அரசு ரூ25 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும்.

- அன்புமணி




தமிழ்நாடு அரசு கடந்த பத்தாண்டிற்கும் மேலாக அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் பகுதிநேர ஆசிரியர்கள் அனைவரையும் பணி நிரந்தரம் செய்யும் அரசாணையை நடப்பு சட்டமன்றக் கூட்டத்தொடரிலேயே வெளியிட வேண்டும். மேலும் ஆசிரியர்களுக்கு உரிய ஊதிய உயர்வை உடனே வழங்க வேண்டும்.

- சீமான்



தமிழ்நாட்டிற்கான நிதி ஒதுக்கீட்டில், மத்திய நிதி அமைச்சர் பாகுபாடு காட்டக் கூடாது. மத்திய அரசு ரூ.2,152 கோடி நிதியை தமிழக அரசுக்கு வழங்காமல் மும்மொழி திட்டத்தை பற்றி பேசுகிறது. இருமொழிக் கொள்கை எங்கள் மாணவர்களை இந்தியாவில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் தங்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் அடையச் செய்துள்ளது.

- வைகோ



தமிழ்நாட்டில் தமிழ்க் கட்டாயப் பாடம் என்ற கனவு இன்னும் நிறைவேற்றப்படாமல் இருப்பது முறையல்ல, எனவே, சுப்ரீம் கோர்ட்டில் நிலுவையில் உள்ள வழக்குகளை விரைவுபடுத்தி அடுத்த ஆண்டிலாவது பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வுகளில் தமிழ்க் கட்டாயப்பாடம் ஆக்கப்படுவதை தமிழக அரசு உறுதி செய்ய வேண்டும்.

- ராமதாஸ்

# ரூ.75 லட்சம் செலவில் தர்மாபுரம் முத்துமாரியம்மன் திருக்கோயில் திருப்பணிகள் நடைபெற உள்ளது: அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்



**சென்னை,மார்ச்.30**

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்பி.கே.சேகர் பாபு (29.03.2025) சென்னை, ஆயிரம் விளக்கு தொகுதிக்கு ட்பட்ட தர்மாபுரம் அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயிலுக்கு வருகை தந்து அங்கு மேற்கொள்ளப்பட வேண்டிய திருப்பணிகள் குறித்து ஆய்வு செய்தார்.

பின்னர், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது, முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி ஏற்பட்ட ஆட்சி ஏற்பட்ட பிறகு எங்கு பார்த்தாலும் திருக்கோயில் மணியோசை, தீப தூப ஆராதனைகள், தேவாரம் மற்றும் திருவாசகம் ஒலித்துக் கொண்டிருக்கின்ற நல்ல சூழ்நிலையில் பல்வேறு திருக்கோயில்களில் திருப்பணிகளும், பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்கிடும் பணிகளும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் ஆயிரம் விளக்கு தொகுதிக்குட்பட்ட தர்மாபுரம் பகுதியில் 35 ஆண்டுகளுக்கு முன்பு குடமுழுக்கு நடைபெற்ற அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயிலை புனரமைத்து குடமுழுக்கு நடத்தி தந்திட வேண்டும் என இந்த தொகுதியின் சட்டப்பேரவை உறுப்பினர் டாக்டர் நா. எழிலன் மற்றும் இப்பகுதி நிர்வாகிகளின் கோரிக்கையை இன்றைய தினம் திருக்கோயிலை ஆய்வு செய்தோம்.

இத்திருக்கோயிலுக்கு முதற்கட்டமாக ரூ. 75 இலட்சம் மதிப்பீட்டில் முத்துமாரியம்மன் சன்னதி, முன்மண்டபம் மற்றும் இதரப் பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வரும் ஏப்ரல் மாதம் இறுதிக்குள் திருப்பணிகள் தொடங்கப்படும். மேலும் பக்தர்களின் பயன்பாட்டிற்கு மண்டபமும் அமைத்து தரப்படும். அனைத்து பணிகளையும் இந்த ஆண்டு இறுதிக்குள் முடித்து குடமுழுக்கு நடத்தப்படும் என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன். திராவிட மாடல் ஆட்சியில் சொன்னதைத்தான் செய்வோம், செய்வதைத்தான் சொல்வோம் என்பதற்கு இந்த திருக்கோயில் திருப்பணிகளை நீங்கள் ஓர் உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் நா.எழிலன், மா.பா. அன்புதுரை, இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் கி.பாரதிராஜா, செயற்பொறியாளர் எம். பாலு, உதவி செயற்பொறியாளர் என். மீனாட்சி சுந்தரம், மாநகராட்சி உறுப்பினர் ஏழுமலை, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கலைஞரின் வருமுன்காப்போம் திட்ட முகாமில் இந்த ஆண்டு இதுவரை 16,18,776 பேர் பயன்பெற்றிருக்கிறார்கள்: வெப்பவாத விழிப்புணர்வு நிகழ்ச்சியை தொடங்கி வைத்து அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்



**சென்னை,மார்ச்.30**

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.மா.சுப்பிரமணியன் (29.03.2025) சென்னை, அடையார் மண்டலம், இந்திரா நகர், சென்னை தொடக்கப்பள்ளியில் கோடைக்கால வெப்ப அலை பாதிப்பு மற்றும் வெப்பவாத தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சியினை தொடங்கி வைத்தார்கள். பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

ஒவ்வொரு கோடைக்காலத்திலும் வெப்பம் அதிகரிப்பது தொடர்பாகவும், வெப்பவாதம் பாதிப்பு தொடர்பாகவும் விழிப்புணர்வு நிகழ்ச்சி ஒவ்வொரு ஆண்டும் செய்யப்பட்டு வருகிறது. மாவட்ட அளவிலும், ஊராட்சி அளவிலும் கூட விழிப்புணர்வு தொடர்ந்து நடைபெற்றிட அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. வெப்ப பாதிப்புகளிலிருந்து பொதுமக்களைப் பாதுகாத்திட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், கோடைக்காலம் தொடங்கியிருப்பதால் வெப்ப பாதிப்பு அதிகரிக்கும் என்கின்ற வகையில் தமிழ்நாட்டில் பெரும்பகுதிகளில் எதிர்வரும் நாட்களில் சராசரி வெப்பநிலை அதிகரிக்க கூடும் என்கின்ற அச்சநிலை இருக்கின்றது. எனவே பொதுமக்கள் உயர்வெப்ப நிலையிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்வதற்கு பகல் 12 மணியிலிருந்து பிற்பகல் 03 மணி வரை தேவையில்லாமல் வெளியில் செல்வதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. குறிப்பாக குழந்தைகள், வயதில் மூத்தவர்கள் அவசியம் இல்லாமல் குறிப்பிடப்பட்ட நேரத்திற்குள் வெளியில் செல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது. உடலில் நீரிழப்பு ஏற்படாமல் இருக்க போதுமான குடிநீரை பருகிட வேண்டும். ORS கரைசல் பொறுத்தவரை தமிழ்நாட்டில் உள்ள 2,286 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் போதுமான அளவிற்கு இந்த கரைசல் கையிருப்பில் வைக்கப்பட்டிருக்கிறது. 24 மணிநேரமும் பொதுமக்கள் தங்களின் தேவைக்கேற்ப பயன்படுத்திக் கொள்ளலாம்.

இதுமட்டுமல்லாமல் எலுமிச்சை சாறு, பழச்சாறுகள், தர்பூசணி, முலாம்பழச்சாறு, மோர் போன்ற நீர்ச்சத்துக்கள் அதிகம் உள்ள பானங்களை பருகலாம் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. திராட்சை, வெள்ளரி போன்ற நீர்ச்சத்து அதிகம் உள்ள உணவுகளை தொடர்ச்சியாக உட்கொள்வது நல்லது என்றும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. செயற்கை குளிர்பானங்களான காபி, டீ, மது போன்ற பானங்களை அருந்துவதை தவிர்க்க வேண்டும். பருத்தியால் ஆன வெளிர்நிறம் கொண்ட தளர்வான உடைகளை அணிவது சரியாக இருக்கும். அதேபோல் வெளியில் செல்கின்ற போது தேவையான குடிநீர், தொப்பி, குடை போன்றவற்றை எடுத்துச் செல்வது அவசியம். வெளியில் செல்லும் போது காலணிகளை அணிந்து செல்வது மிக அவசியம். நான்கு சக்கர வாகனங்களில் அமர்ந்தவுடன் உடனடியாக ஏசி பயன்படுத்தாமல் சிறிது நேரம் கண்ணாடி கதவுகளை இறக்கி வைத்துவிட்டு இயற்கை காற்றோட்டத்திற்கு பிறகு குளிர்சாதன வசதிகளை பயன்படுத்திக் கொள்வது நல்லது. குழந்தைகள், வயது முதிர்ந்தவர்கள், கர்ப்பிணிகள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது. இதய நோயாளிகள், இரத்த அழுத்தம் கொண்டவர்கள், மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் அதிகமாக வெப்பத்தால் பாதிக்கப்படக் கூடும். அவர்களை கூடுதல் கவனத்துடன் நல்லது. ஆகையால் இத்தகைய விழிப்புணர்வு நிகழ்ச்சியை இன்று சென்னை மாநகராட்சியில் தொடங்கி வைத்திருக்கிறோம்.

கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம்

கலைஞரின் வருமுன் காப்போம் திட்டத்தின் மூலம் மருத்துவ முகாம்கள் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் நடைபெற்று வருகிறது. வருமுன் காப்போம் திட்டத்தைப் பொறுத்தவரை 1999 முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது தொடங்கி வைக்கப்பட்டது. கடந்த ஆட்சிக்காலம் சுமார் 10 ஆண்டுகள் இத்திட்டத்தை நிறுத்தி வைத்திருந்தார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சராக முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபிறகு வருமுன்காப்போம் திட்டத்தை கலைஞரின் வருமுன் காப்போம் என்கின்ற பெயர் மாற்றத்துடன் தொடங்கினோம். 2021 செப்டம்பர் திங்கள் 21 ஆம் தேதி சேலம் மாவட்டம், வாழப்பாடியில் இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. தமிழ்நாட்டில் 385 வட்டாரங்கள் இருக்கின்றது. ஒவ்வொரு வட்டாரத்திற்கும் 3 என்கின்ற அளவில் 1250 முகாம்கள் என அன்று திட்டமிடப்பட்டது. எனவே ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட இலக்கை காட்டிலும் கூடுதலான வகையில் இம்முகாம்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த முகாம்களில் 17 வகையான மருத்துவம், 30 வகையான பரிசோதனைகள் என்கின்ற வகையில் இம்முகாம்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

சென்னை மாநகராட்சி சார்பில் இந்த ஆண்டிற்கான முகாம் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதில் 2021-22 ஆம் ஆண்டு 1250 முகாம்கள் என திட்டமிடப்பட்டு 1260 முகாம்கள் நடத்தப்பட்டு 9,06,427 பேர் பயன்பெற்றனர். 2022-23 ஆம் ஆண்டு 1532 முகாம்கள் நடத்தப்பட்டு 15,08,469 பேர் பயன்பெற்றனர். 2023-24 ஆம் ஆண்டு 1253 முகாம்கள் நடத்தப்பட்டு 12,54,430 பேர் பயன்பெற்றனர். நடப்பாண்டில் இதுவரை 1608 முகாம்கள் நடத்தப்பட்டிருக்கிறது. கடந்த 4 ஆண்டுகளிலேயே இதுவரை அதிகபட்ச முகாம்கள் நடத்தப்பட்டிருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல் அதிகபட்சமான பயனாளிகள் பயன்பெற்றதும் இந்த ஆண்டு. ஆக மொத்தம் இந்த ஆண்டு இதுவரை 16,18,776 பேர் பயன்பெற்றிருக்கிறார்கள். பெருநகர சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரை இதுவரை 9 முகாம்கள் நடத்தப்பட்டிருக்கிறது. இன்னமும் 6 முகாம்கள் நடத்தப்பட வேண்டும். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை வருவதற்கு முன்னால் 6 முகாம்களும் நடத்தப்படும்.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், கூடுதல் ஆணையர் (சுகாதாரம்) டாக்டர்.வி.ஜெயச்சந்திர பானு ரெட்டி, தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண் தம்புராஜ், , நிலைக்குழுத் தலைவர் (பொது சுகாதாரம்) டாக்டர் கோ.சாந்தகுமாரி, மண்டலக்குழுத் தலைவர்ஆர். துரைராஜ், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.செல்வ விநாயகம், இணை இயக்குநர் மரு.செந்தில், மாநகர நல அலுவலர் மரு.ஜெகதீசன், மாமன்ற உறுப்பினர்து.சுபாஷினி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ராமாபுரம் மற்றும் மெரினா பகுதிகளில் உடல்வலி நிவாரண மாத்திரைகள் வைத்திருந்த 4 பேர் கைது

**சென்னை மார்ச் 30-**

சென்னை பெருநகர காவல், ராமாபுரம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான தனிப்படையினருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில், தனிப்படை போலீசார் 26 ந் தேதி அன்று மதியம், ராமாபுரம், ஆறுமுகம் நகர், முட்புதர் அருகில் கண்காணித்தபோது, அங்கு சட்டவிரோதமாக உடல் வலி நிவாரண மாத்திரைகளை வைத்திருந்த 1.ஆஷிக் (எ) ஆமோஷ், 2.கலைச்செல்வன் (எ) மேஷக், ஆகிய இருவரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து உடல் வலி நிவாரண மாத்திரைகள் -100 பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் எதிரி ஆஷிக் மீது ஏற்கனவே குன்றத்தூர் காவல் நிலையத்தில் 1 கொலை வழக்கும், மற்றொரு எதிரி கலைச்செல்வன் மீது உடல்வலி நிவாரண மாத்திரைகள் வைத்திருந்தது மற்றும் வழிப்பறி என 2 குற்ற வழக்குகளும் உள்ளது தெரிய வந்தது.

கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.

மேலும், மெரினா காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல குழுவினருககு கிடைத்த ரகசிய தகவலின் பேரில், காவல் குழுவினர் 26 ந் தேதி அன்று மெரினா கடற்கரை சர்வீஸ் சாலை, நம்ம சென்னை பேருந்து நிறுத்தம் பின்புறம் உள்ள பொதுக்கழிப்பிடம் அருகில் கண்காணித்தபோது, அங்கு சட்டவிரோதமாக உடல் வலி நிவாரண மாத்திரைகளை வைத்திருந்த கௌஷ்பாஷா, என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து உடல் வலி நிவாரண மாத்திரைகள் -225 மற்றும் 1 செல்போன் பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட கௌஷ்பாஷா கொடுத்த தகவலின்பேரில், இவருக்கு மாத்திரைகளை விநியோகம் செய்த சந்தோஷ், என்பவரை காவல் குழுவினர், கலங்கரை விளக்கம் பறக்கும் இரயில் நிலையம் அருகில் இருசக்கர வாகனத்துடன் கைது செய்தனர். அவரிடமிருந்து உடல் வலி நிவாரண மாத்திரைகள்-305, பணம் ரூ.1,19,000/-, 1 சிறிய கத்தி, 1 செல்போன் மற்றும் 1 இருசக்கர வாகனம் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டது.விசாரணையில் எதிரி கௌஷ்பாஷா மீது கஞ்சா உட்பட 7 குற்ற வழக்குகளும், மற்றொரு எதிரி சந்தோஷ் மீது 1 குற்ற வழக்கும் உள்ளது தெரியவந்தது.கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

# முத்தியால்பேட்டை பகுதியில் தடை செய்யப்பட்ட மாஞ்சா நூல் மற்றும் காற்றாடி தயார் செய்து விற்பனை செய்தவர் கைது

**சென்னை மார்ச் 30-**

வட சென்னையில் மாஞ்சா நூல் பயன்படுத்தி காற்றாடி பறக்கவிடுவது உயிரிழப்பு போன்ற விபத்துக்களை ஏற்படுத்தும் என்பதால் சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ.அருண் உத்தரவின் பேரில் சென்னை பெருநகர காவல் ஆணையரக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் காற்றாடி மற்றும் மாஞ்சா நூல் தயாரிப்பது, விற்பனை செய்வது மற்றும் பறக்க விடுவது தடை செய்யப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, காவல் ஆய்வாளர்கள் தலைமையிலான காவல் குழுவினர் தங்களது காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கண்காணித்து, காற்றாடி மற்றும் மாஞ்சா நூல் தயாரிப்பவர்கள், விற்பனை செய்பவர்கள் மற்றும் மாஞ்சா நூல் பயன்படுத்தி காற்றாடி பறக்கவிடுபவர்கள் கண்காணித்து கைது செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக,துறைமுகம் சரக உதவி கமிஷ்னர் பி.ராஜசேகரன் மேற்பார்வையில் முத்தியால்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் ஜானகிராமன் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசலிய தகவலின் பேரில், காவல் குழுவினர் மண்ணடி, சைவ முத்தையா 2வது சந்தில் உள்ள ஒரு வீட்டை கண்காணித்தபோது, அங்கு தடை செய்யப்பட்ட மாஞ்சா நூல் மற்றும் காற்றாடி தயார் செய்து சட்டவிரோதமாக விற்பனை செய்வது உறுதி செய்யப்பட்டது.அதன் பேரில், காவல் குழுவினர் மேற்படி வீட்டில் சோதனைகள் மேற்கொண்டு தடை செய்யப்பட்ட காற்றாடி மற்றும் மாஞ்சா நூல் தயாரித்து விற்பனை செய்த ராகவன், என்பவரை கைது செய்தனர்.

அவரது வீட்டிலிருந்து 3 மாஞ்சா நூல் லொட்டாய்கள், 46 காற்றாடிகள், 8 ரோல்கள் காற்றாடி தயாரிக்க பயன்படுத்தும் கலர் பேப்பர் மற்றும் மாஞ்சா நூல் தயாரிக்க பயன்படுத்தும் மூங்கில் குச்சிகள்-90 ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டது. கைது செய்யப்பட்ட எதிரி ராகவன் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

# ரயில் பயணியிடம் செல்போன் பறிப்பில் ஈடுப்பட்ட ரவுடி கைது

சென்னை மார்ச் 30-

பெங்களூரில் இருந்து தானாப்பூர் செல்லும் சங்கமித்ரா விரைவு ரயிலானது திருவொற்றியூர் – விம்கோ நகர் வந்தந்தபோது, பயணியிடம் கத்தி முனையில் செல்போனை பறித்துச் சென்று தப்பி ஓடிய ரவுடி ராஜேஷை கைது செய்தனர். திருவொற்றியூர் ரயில் நிலைய நடைமேடை 2ல் சுற்றி திரிந்தபோது ரயில்வே போலீசாரிடம் பிடிபட்டார்

# சுகாதார ஆய்வாளர் பணியிடங்களை நிரப்ப எஸ்டிபிஐ வலியுறுத்தல்

**சென்னை மார்ச் 30-**

எஸ்டிபிஐ கட்சியின் மாநில தலைவர் நெல்லை முபாரக் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

தமிழகத்தில் காலியாக இருக்கக்கூடிய சுகாதார ஆய்வாளர் நிலை 2 பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும் என்கிற கோரிக்கைகளை வலியுறுத்தி, தமிழ்நாடு சுகாதார ஆய்வாளர் சங்கங்களின் கூட்டமைப்பினர் கவன ஈர்ப்பு போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த பணியிடங்கள் 100 சதவிகிதம் காலியாக இருப்பது மிகுந்த கவலை அளிக்கிறது. இதனால் அரசின் சுகாதார மேம்பாட்டுத் திட்டங்கள், நடவடிக்கைகள் பலவீனமடைகின்றன. இந்த நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்தி நடைபெறும் போராட்டத்தினை எஸ்டிபிஐ கட்சி ஆதரிப்பதோடு, தமிழக மக்களின் நலன் கருதி, இந்தக் காலிப்பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# வியாசர்பாடி பகுதியில் சட்டவிரோதமாக உடல்வலி நிவாரண மாத்திரைகள் வைத்திருந்த 6 பேர் கைது

**சென்னை மார்ச் 30-**

சென்னை பெருநகர காவல், வியாசர்படி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான தனிப்படையினருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில், தனிப்படை போலீசார் வியாசர்பாடி கூட்ஷெட் ரோட்டில் கண்காணித்த போது, அங்கு சட்டவிரோதமாக உடல் வலி நிவாரண மாத்திரைகள் மற்றும் கஞ்சா வைத்திருந்த 1.கீர்த்திவாசன், 2.கார்த்திகேயன், சென்னை, 3.ரூபன்,

4.சுல்தான் அலாவுதீன், 5.ஐஸ்வர்யா, 6.கௌதம், ஆகிய 6 பேரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து மொத்தம் 570 உடல் வலி நிவாரண மாத்திரைகள் மற்றும் 300 கிராம் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது.விசாரணையில் எதிரி கார்த்திகேயன் மீது 1 குற்ற வழக்கும், ரூபன் மீது 3 வழிப்பறி உட்பட 5 குற்ற வழக்குகளும், சுல்தான் (எ) அலாவுதீன் மீது போதைப்பொருள் வழக்கு உட்பட 2 குற்ற வழக்குகளும், கௌதம் மீது 2 வழக்குகளும் உள்ளது தெரியவந்தது.கைது செய்யப்பட்ட 6 எதிரிகளும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

# திருவல்லிக்கேணி பகுதியில் ஐபிஎல் கிரிக்கெட் போட்டிக்கான டிக்கெட்டுகளை கள்ள சந்தையில் விற்பனை செய்த 25 பேர் கைது

**சென்னை மார்ச் 30-**

சென்னை, சேப்பாக்கம், எம்.ஏ.சிதம்பரம் கிரிக்கெட் மைதானத்தில், நேற்று முன் தினம் சென்னை சூப்பர் கிங்ஸ் மற்றும் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணிகளுக்கிடையே ஐபிஎல் டி-20 கிரிக்கெட் போட்டி இரவு ஆட்டமாக நடைபெற்றது.

மேற்படி கிரிக்கெட் போட்டிக்கான டிக்கெட்டுகளை கள்ள சந்தையில் விற்பனை செய்பவர்களை கண்காணித்து கைது செய்ய சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ.அருண், உத்தரவிட்டதின்பேரில், உயர் அதிகாரிகளின் நேரடி மேற்பார்வையில், காவல் ஆய்வாளர்கள் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு கண்காணித்து வந்தனர். திருவல்லிக்கேணி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான தனிப்படை காவல் குழுவினர் நேற்று முன் தினம் சேப்பாக்கம் கிரிக்கெட் மைதானம் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளான பட்டாபிராம் கேட், வாலாஜா சாலை, பெல்ஸ் ரோடு, வாலாஜா ரோடு சந்திப்பு, விக்டோரியா ஹாஸ்டல் சாலை சந்திப்பு, சேப்பாக்கம் இரயில்வே ஸ்டேஷன் ஆகிய இடங்களில் தீவிரமாக கண்காணித்து, அங்கு கிரிக்கெட் போட்டிக்கான டிக்கெட்டுகளை சட்டவிரோதமாக கள்ள சந்தையில் அதிக விலைக்கு விற்பனை செய்தது தொடர்பாக 18 வழக்குகள் பதிவு செய்து, 1.நிர்மல், 2.அவினாஷ், 3.வெங்கட்ரமனையா, 4.சுரேஷ், 5.நவீன், 6.செரீப், 7.ஷ்வாப், 8.விஜய்,9.வெற்றிவேல்,10.சுதாகர், 11.பிரவீன், 12.நரேஷ்,13.கணேஷ்குமார், 14.சந்தோஷ், 15.யூசுப், 16.நிதிஷ், 17.பரத், 18.கிருஷ்ணா, 19.ஜெகபிரியன், 20.நேத்தீஸ்வரன், 21.தனஞ்செய், 22.ஹம்தன், 23.அஜய், 24.கஞ்சப்பா, 25.அருண்குமார், ஆகிய 25 பேரை கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட 25 நபர்களிடமிருந்து கள்ள சந்தை மற்றும் ஆன்லைன் மூலம் விற்பனை செய்ய வைத்திருந்த 48 டிக்கெட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டது.

# எழும்பூர் மற்றும் பல்வேறு பகுதிகளில் இருசக்கர வாகனங்களை திருடியவர் கைது

**சென்னை மார்ச் 30-**

சென்னை, தேனாம்பேட்டை, காமராஜர் சாலை பகுதியில் வசித்து வரும் செல்வம், என்பவர் கடந்த 8 ந்தேதி அன்று புதுப்பேட்டை, ஆதித்தனார் சாலை, நாரயண நாயக்கன் தெரு சந்திப்பில் உள்ள ஒரு கடையின் முன்பு அவரது இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு அருகிலுள்ள கடைக்கு சென்று இருசக்கர வாகனத்திற்கு உதிரிபாகங்கள் வாங்கி விட்டு திரும்ப வந்து பார்த்தபோது, அவரது இருசக்கர வாகனத்தை யாரோ திருடிச் சென்றது தெரியவந்தது. இது குறித்து செல்வம் எழும்பூர் காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். எழும்பூர் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி இருசக்கர வாகனத்தை திருடிச் சென்ற எதிரி இம்ரான், என்பவரை கைது செய்தனர்.

# நிலம் வாங்கி தருவதாக கூறி பணம் ரூ.6 லட்சம் பெற்று ஏமாற்றிய ரியல் எஸ்டேட் நிறுவன உரிமையாளர்கள் இருவர் கைது

**சென்னை மார்ச் 30-**

சென்னை, அண்ணாநகர் மேற்கு, பாடிகுப்பம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பில் வசித்து வரும் அஜ்மல்கான், என்பவர் தனியார் தொலைக்காட்சி நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறார். இவர் நிலம் வாங்குவதற்காக மெகா பிராபர்டி என்ற ரியல் எஸ்டேட் நிறுவனத்தின் உரிமையாளர்கள் ராஜா ஜாக்கிரியாஸ் மற்றும் ஆனந்த்குமார் ஆகிய இருவரிடம் தொடர்பு கொண்டபோது, அவர்கள் காட்டான்கொளத்தூரில் 1,800/- சதுரடி காலி இடம் இருப்பதாகவும், அதனை வாங்கி தருவதாகவும் கூறியதன்பேரில், அஜம்ல்கான் 2023ம் ஆண்டு மேற்படி இருவருக்கும் பணம் ரூ.6 இலட்சம் கொடுத்துள்ளார். ராஜா ஜாக்கிரியாஸ் மற்றும் ஆனந்த்குமார் ஆகியோர், அஜ்மல்கானுக்கு நிலம் வாங்கி தராமலும், பணத்தை திரும்ப தராமலும் ஏமாற்றியுள்ளனர்.

இது குறித்து அஜ்மல்கான், திருமங்கலம் குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின்பேரில், போலீசார் வழக்குப்பதிவு செய்து, விசாரணை மேற்கொண்டனர்.

திருமங்கலம் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்ததில், புகார்தாரர் குறிப்பிட்டிருந்தது உண்மையென தெரியவந்தது. அதன்பேரில் காவல் குழுவினர் மேற்படி மோசடியில் ஈடுபட்ட எதிரிகள் 1.ராஜா ஜாக்கிரியாஸ், 2.ஆனந்த்குமார், ஆகிய 2 பேரை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப்பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே...
பேசுவது எமனாக இருக்கலாம்

# தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பில் கோடை விடுமுறை காலத்தில் குடும்பத்துடன் சென்று மகிழ 3 நாட்கள் இன்ப சுற்றுலா

**சென்னை மார்ச் 30-**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தேவையினை அறிந்து, அரைநாள் முதல் 14 நாட்கள் வரையில் 52 வகையான தொகுப்புச் சுற்றுலாக்களை இயக்கி வருகிறது. குறிப்பாக கோடை விடுமுறைக் காலத்தில் குடும்பத்துடன் சென்று மகிழ 3 நாட்கள் ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு- ஒகேனக்கல், குற்றாலம், மைசூர் - பெங்களூர் மற்றும் மூனார் சுற்றுலாக்களை இயக்கிவருகிறது.சுற்றுலாப்பயணிகள் மற்றும் மாணவ, மாணவிகள் தங்களது கோடை விடுமுறையை முன்னிட்டு குடும்பத்துடன் கொண்டாடி மகிழ்கின்ற வகையில் 3 நாட்கள் ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு- ஒகேனக்கல், குற்றாலம், மைசூர் - பெங்களூர் மற்றும் மூனார் சுற்றுலாக்கள் போன்ற கோடைக்கால சுற்றுலா பயணத்திட்டங்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக இணையதளம் மூலம் 08.11.2024 முதல் முன்பதிவு தொடங்கப்பட்டு, சுற்றுலா பயணிகளால் முன்பதிவுகள் நடைபெற்று வருகிறது. மேலும் இக்கோடைக்கால சுற்றுலாக்களுக்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் சுற்றுலாப் பயணிகள் பயன்பெறும் வகையில் கட்டணத்தில் சிறப்பு சலுகைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட சுற்றுலாக்களில், 3 நாட்கள் கொடைக்கானல் சுற்றுலாவில் – 6 தொகுப்புகளில் இதுவரை 48 நபர்கள் முன்பதிவு செய்துள்ளனர். 3 நாட்கள் ஊட்டி சுற்றுலாவில் 5 தொகுப்புகளில் இதுவரை 41 சுற்றுலாப் பயணிகள் முன்பதிவு செய்துள்ளனர்.அதேபோல், 3 நாட்கள் மூனாறு சுற்றுலா தொகுப்பில் – 2 தொகுப்புகளில் முன்பதிவு தொடங்கப்பட்டு, இதுவரை ஒரு தொகுப்பில் 9 சுற்றுலா பயணிகள் முன்பதிவு செய்து, இச்சுற்றுலா இயக்கப்பட்டுள்ளது. மற்றொரு தொகுப்பில் 4 சுற்றுலாப்பயணிகள் முன்பதிவு செய்துள்ளனர். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மற்ற பயணத்திட்டங்களுக்கு முன்பதிவு செய்ய தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் www.ttdconline.com இணையதள பக்கத்திலும்மேலும் கூடுதல் விவரங்களை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தொலைபேசி எண்கள்: கட்டணமில்லா தொலைபேசி எண்.18004251111 044-25333333, 044-25333444 மற்றும் வாட்ஸ் அப் எண். 7550063121 ஆகிய எண்களை தொடர்பு கொள்ளலாம்

## புதுச்சேரி மாநிலம் காரைக்காலில்
# அரசு பள்ளி தலைமை ஆசிரியர்கள் கூண்டோடு இடமாற்றம்: பள்ளி கல்வித்துறை இயக்கம் உத்தரவு

**புதுச்சேரி மார்ச் 30**

புதுச்சேரி காரைக்கால் அரசு பள்ளிகளில் பணிபுரியும் தலைமை ஆசிரியர்கள் கூண்டோடு இடமாற்றம் செய்யப்பட்டனர் இதற்கான உத்தரவை பள்ளி கல்வித் துறை பிறப்பித்துள்ளது புதுச்சேரி கல்வித்துறையில் தலைமை ஆசிரியர்களுக்கு கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் பதவி உயர்வு அளிக்கப்படாமல் இருந்தது இதை தலைமை ஆசிரியர்களுக்கு மத்தியில் விரகதியில் இருந்தனர் இது தொடர்பாக தலைமை ஆசிரியர்கள் முதல்வர் ரங்கசாமி மற்றும் கல்வித்துறை அமைச்சர் நமச்சிவாயத்திடம் முறையிட்டனர்

இதனைத் தொடர்ந்து கடந்த ஜனவரி மாதம் தலைமை ஆசிரியர் நிலை II இல் இருந்து தலைமை ஆசிரியர் நிலை I ஆக பதவி உயர்வு அழிக்கப்பட்டது இந்நிலையில் தற்போது புதுச்சேரி கல்வித்துறையில் அரசு ஆரம்ப மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் தலைமை ஆசிரியர்களுக்கான பணியிட மாற்றம் கலந்தாய்வு நடைபெற்றது இதில் தலைமை ஆசிரியர்கள் மற்றும் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டு கூண்டோடு ஏமாற்றம் செய்யப்பட்டுள்ளது

அதன்படி தலைமை ஆசிரியர் நிலை -I புதுச்சேரி மற்றும் காரைக்காலில் பணி புரியும் மூன்று தலைமை ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் இதே போன்று தலைமை ஆசிரியர் நிலை II பணி புரியும் தலைமை ஆசிரியர்கள் 67 பேர் கூண்டோடு பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்

மேலும் புதுவை காரைக்கால் ஏனாம் ஆகிய பிராந்தியங்களில் பணிபுரியும் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் 44 பேருக்கு தலைமை ஆசிரியர் நிலை II ஆக பதிவு உயர்வு வழங்கப்பட்டுள்ளது ஏற்கனவே தலைமை ஆசிரியர் நிலை II ஆக பணிபுரிந்து வரும் புதுவையில் 5 பேரும் காரைக்காலில் இரண்டு பேரும் வட்டத்துணை ஆய்வாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது

இதற்கான உத்தரவுகளை பள்ளி கல்வித்துறை இயக்குனர் வெர்பினா ஜெயராஜ் பிறப்பித்துள்ளார்.

## விழுப்புரம் மாவட்டம்
# முகையூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஏமப்பேர் அணைக்கட்டு மறுகட்டுமானம் செய்வது தொடர்பாக அமைச்சர் க.பொன்முடி நேரில் ஆய்வு




**விழுப்புரம் மார்ச்-30,**

வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி கலெக்டர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், தலைமையில், விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஏமப்பேர் அணைக்கட்டு மறுகட்டுமானம் செய்வது தொடர்பாக நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் தெரிவிக்கையில், தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், பொதுமக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கும் பல்வேறு சிறப்புத் திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், நடப்பாண்டிற்கான நிதி நிலை அறிக்கையில், விழுப்புரம் மாவட்டத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகள் மேற்கொள்வதற்கான அறிவிப்புகள் மற்றும் நிதி ஒதுக்கீடும் செய்தும் ஆணையிட்டுள்ளார்கள்.

அதனடிப்படையில், இன்றைய தினம், முகையூர் ஊராட்சி ஒன்றியம், ஏமப்பேர் அணைக்கட்டு ரூ.130 கோடி மதிப்பீட்டில் மறுகட்டுமானம் செய்வது தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோயிலூர் வட்டம் அத்தண்டமருதூர் கிராமம் மற்றும் விழுப்புரம் மாவட்டம், கண்டாச்சிபுரம் வட்டம்.

ஏமப்பேர் கிராமம் இடையே தென்பெண்ணை யாற்றின் குறுக்கே 1862 ஆம் ஆண்டு திருக்கோயிலூர் அணைக்கட்டு கட்டப்பட்டது. இந்த அணைக்கட்டின் வலது புறம் மலட்டாறு வாய்க்கால், இராகவையன் வாய்க்கால், சித்தலிங்கமடம் வாய்க்கால் மற்றும் வடமருதூர் வாய்க்கால், இடது புறம் பம்பை வாய்க்கால் மூலம் 98 ஏரிகள் மூலம் 9981 ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றது.

2024-ஆம் ஆண்டு ஏற்பட்ட பெஞ்சல் புயல் மற்றும் தென்பெண்ணையாற்றில் ஏற்பட்ட பெருவெள்ளத்தினால் திருக்கோயிலூர் அணைக்கட்டு முழுவதுமாக சேதமடைந்து, திருக்கோயிலூர் அணைக்கட்டின் இடது கரை 400 மீட்டர் நீளத்திற்கு உடைப்பு ஏற்பட்டது. இதிலிருந்து வெள்ள நீர் பம்பை வாய்க்காலின் கரைகள் 500 மீட்டர் நீளத்திற்கு முழுவதுமாக உடைத்து சென்றது. திருக்கோயிலூர் அணைக்கட்டின் கீழ்புறம் ஏற்பட்ட அரிப்பினால் 300 மீட்டர் அளவிற்கு மட்ட அளவு குறைந்துள்ளது. ஆகையால் ஆற்றல் குறைப்பு அமைப்புகள் முழுவதும் சேதமடைந்துள்ளது.

அந்த வகையில், கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோயிலூர் வட்டம், அத்தண்டமருதூர் கிராமம் பெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட திருக்கோயிலூர் அணைக்கட்டினை ரூ.130.00 கோடி மதிப்பீட்டில் சீரமைப்பதற்கான நீர்வளத்துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் 2025-2026 ஆண்டுக்கான அறிவிப்புகளில் அறிவிக்கப்பட்டது. திருக்கோயிலூர் அணைக்கட்டு மறுசீரமைப்பின் மூலம் 24,655 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

மேலும், ஏமப்பேரிலிருந்து சுடுகாட்டிற்கு சென்றிடும் வகையில், பம்பை ஆற்றின் குறுக்கே 10 மீ நீளத்திற்கு சிறுபாலம் அமைத்திடவும் துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது என வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி தெரிவித்தார்.

ஆய்வின்போது, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) ஜெ.இ.பத்மஜா, திருக்கோவிலூர் நகர் மன்ற தலைவர் முருகன், ஊரக வளர்ச்சித்துறை செயற்பொறியாளர் ராஜா, விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் ஆ.சா.பிரபு, நீர்வளத்துறை உதவி பொறியாளர் கார்த்தி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## உலக தண்ணீர் தினத்தை முன்னிட்டு
# ஆலம்பூண்டி ஊராட்சியில் சிறப்பு கிராம சபை கூட்டம்: மஸ்தான் எம்.எல்.ஏ. பங்கேற்பு



**செஞ்சி மார்ச்-30,**

உலக தண்ணீர் தினத்தை முன்னிட்டு ஆலம்பூண்டி ஊராட்சியில் நடைபெற்ற சிறப்பு கிராம சபை கூட்டத்தில் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார்.கூட்டத்தில் கலைஞர் கனவு இல்ல திட்டத்தில் பயனாளிகளை தேர்வு செய்வது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன..

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் ஆலம்பூண்டி ஊராட்சியில் உலக தண்ணீர் தினத்தை முன்னிட்டு சிறப்பு கிராம சபை கூட்டம் நடைபெற்றது.

ஊராட்சி மன்ற தலைவர் முத்தம்மாள் சேகர் தலைமையில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நடராஜன், பிரபா சங்கர் ஆகிய முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான், செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார்ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டனர்.

கிராம சபை கூட்டத்தில் உலக தண்ணீர் தினத்தை முன்னிட்டு கிராமத்தில் சுத்தமான குடிநீர் விநியோகத்தினை உறுதி செய்தல்,மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில்குளோரின் கலப்பதை உறுதி செய்தல்,.கலைஞரின் கனவு இல்ல திட்டத்தில்தகுதியான பயனாளிகளை தேர்வு செய்வது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதில்ஒன்றிய செயலாளர்கள் விஜயராகவன், பச்சையப்பன், ஒன்றிய கவுன்சிலர்கள் கேமல், டிலைட், உள்ளிட்ட பொதுமக்கள்கலந்து கொண்டனர்.

# மக்கள் நீதி மய்யம் கட்சியின் விழுப்புரம் மண்டல ஆலோசனை கூட்டம்
## பொதுச்செயலாளர் அருணாச்சலம் பங்கேற்பு



**செஞ்சி மார்ச்-30,**

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அடுத்த ஆலம்பூண்டியில் தனியார் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற மக்கள் நீதி மையம் கட்சியின் விழுப்புரம் மண்டல ஆலோசனை குழு கூட்டம் மக்கள் நீதி மையம் கட்சியின் பொதுச் செயலாளர் அருணாச்சலம், தலைமை தாங்கினார்

மாநில செயலாளர் ஸ்ரீபதி முன்னிலை வகித்தார் நடைபெற்ற மேலும் இக்கூட்டத்தில் மத்திய அரசு தமிழகத்தில் இந்தி மொழியை திணிப்பதை கண்டித்தும், விவசாய விலை பொருட்களுக்கு நிரந்தர விலை நிர்ணயம் செய்திட வலியுறுத்தியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இதனை தொடர்ந்து எதிர்வரும் சட்டமன்ற தேர்தலில் மக்கள் நீதி மையம் கட்சியின் கூட்டனி கட்சியினருடன் இணைந்து திமுகவோடு தேர்தல் பணியாற்றி அதிகப்படியான தொகுதிகளில் கூட்டணி கட்சிகள் வெற்றி பெற செய்ய உழைத்திட வேண்டும் எனவும் இக்கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

நிகழ்ச்சியில் விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர் உள்ளிட்ட மாவட்டங்களை சேர்ந்த கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# செஞ்சி, வல்லம் ஒன்றியத்தில் ஆர்ப்பாட்டம்



**செஞ்சி. மார்ச். 30 .**

மயிலம் சட்டமன்றத் தொகுதி வல்லம் ஒன்றியம் திமுக சார்பில் நாட்டார்மங்கலம், திருவம்பட்டில் 100 நாள் வேலை திட்டத்திற்கு நிதி வழங்காத மோடி அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா தலைமை தாங்கி கண்டன ஆர்ப்பாட்டம் தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். ஒன்றிய செயலாளர்கள் வடக்குஅண்ணாதுரை, தெற்கு துரை,மத்திய இளம்வழுதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் சேகர்ஒன்றிய குழு தலைவர் அமுத ரவிக்குமார்,மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் அண்ணாமலை,மாவட்ட பிரதிநிதிகள் துரை திருநாவுக்கரசு,ராமதாஸ், கண்ணன், துணை செயலாளர்கள் பாண்டியராஜன், லட்சுமணன்,அவைத்தலைவர் ராமகிருஷ்ணன், ,விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் சந்திரன் ,தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் கார்வண்ணன்,ஒன்றிய கவுன்சிலர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் மாவட்ட ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.கூட்டத்தில் கண்டன முழக்கமிட்டனர்.



**புதுச்சேரி லாஸ்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் ஸ்ரீ சப்தகிரி அறக்கட்டளை சார்பில் புனித ரமலான் பண்டிகையை முன்னிட்டு முன்னாள் சபாநாயகர் சப்தகிரி வி.பி. சிவக்கொழுந்து, சப்தகிரி அறக்கட்டளையின் பொறுப்பாளர் சப்தகிரி வி.பி. எஸ். ரமேஷ் குமார் ஆகியோர் 600-க்கும் மேற்பட்ட இஸ்லாமிய குடும்பத்திற்கு பரிசு பொருட்களும்,நலத்திட்ட உதவிகளும் வழங்கி ரமலான் வாழ்த்துக்களை கூறினர்.**

# செஞ்சி ஒன்றியம் நரசிங்கராயன்பேட்டை, ஆலம்பூண்டியில் ஒன்றிய பாஜக அரசை கண்டித்து திமுக சார்பில் ஆர்ப்பாட்டம்
## மஸ்தான் எம்.எல்.ஏ தலைமையில் நடந்தது



**செஞ்சி மார்ச்-30,**

திமுக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க ஸ்டாலின் அவர்களின்அறிவுறுத்தலின்படி ஒன்றிய பாஜக அரசு கடந்த நான்கரை மாதங்களாக தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய ரூபாய் 4034 கோடி அளவுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட நிதியை வழங்குவது குறித்து திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள்நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பிய போது அதற்கு எவ்வித பதிலையும் தராமலும் தமிழ்நாட்டுக்கு தர வேண்டிய ரூபாய் 4034 கோடி அளவுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட நிதியை வழங்காமல் மாற்றான் தாய் மனப்பான்மையுடன் தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய பாஜக அரசை கண்டித்து திமுக சார்பில் அனைத்து கழக ஒன்றியங்களிலும் தலா இரண்டு அனுமதிக்கப்படு இடங்களில் 100 நாள்வேலைவாய்ப்பில் பயன் பெறுவோரை திரட்டி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்திட வேண்டும் உத்தரவிட்டிருந்தனர்.

அந்த வகையில் விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதி செஞ்சி ஒன்றியம் நரசிங்கராயன் பேட்டை ,ஆலம்பூண்டி ஆகிய ஊராட்சிகளில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்ட கூட்டத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார் .

செஞ்சி ஒன்றிய பெருந்தலைவரும் செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளர் விஜயகுமார், மத்திய ஒன்றிய செயலாளர் விஜயராகவன், மேற்கு ஒன்றிய செயலாளர் பச்சையப்பன், பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த் ஆகியோர் முன்னிலை வகித்தனர் .

ஊராட்சி மன்றத் தலைவர்கள் பிலால், முத்தம்மாள்சேகர் ஆகியோர்அனைவரையும் வரவேற்றனர்.

ஆர்பாட்டத்தில் மாவட்ட கவுன்சிலர்கள் அரங்க ஏழுமலை, அகிலா பார்த்திபன், அவைத்தலைவர்கள் வாசு, ஆறுமுகம், துணைச் செயலாளர்கள் செல்வமணி, மதியழகன், குமார்,மாவட்ட பிரதிநிதிகள் அய்யாதுரை, கோட்டீஸ்வரன், குணசேகரன், பொருளாளர்கள் இக்பால், டிலைட், முன்னால்ஊராட்சி மன்றதலைவர்கள் காசியம்மாள் ஏழுமலை, பாலகிருஷ்ணன், ஊராட்சி செயலாளர் சிவக்குமார், துணைத் தலைவர் கலைவாணி சிலம்பரசன்,வனக்குழு தலைவர் ராமு,தொண்டரணி பாஷா, இளைஞர் அணிஅமைப்பாளர் ஜம் போதி பழனி துணை அமைப்பாளர் பழனி,உள்ளிட்ட உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள்,திமுக நிர்வாகிகள் மற்றும் 100 நாள் வேலைப்பணியில் ஈடுபடும் பணியாளர்கள் உள்ளிட்டஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு 100 நாள் வேலை உறுதி திட்டத்திற்கு நிதி வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும்ஒன்றிய பாஜக அரசை கண்டித்துகண்டன கோஷமிட்டனர்.

தொடர்ந்து தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும் என்ற உறுதிமொழியை அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

# மேல்விஷாரம் அ.தி.மு.க. சார்பில் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி

**ராணிப்பேட்டை, மார்ச், 30-**

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு அடுத்த மேல்விஷாரம் நகர அ.தி.மு.க. சார்பில் ரமலான் பண்டிகையை முன்னிட்டு இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி ஹன்சா நகரில் நடைபெற்றது.

விழாவிற்கு மேல்விஷாரம் நகர அ.தி.மு.க. செயலாளர்ஏ. இப்ராஹிம் கலிலுல்லா தலைமை வகித்தார்.மாவட்ட சிறுபான்மை பிரிவு தலைவர் மன்சூர்பாஷா வரவேற்றார். விழாவில் சிறப்பு அழைப்பாளராக ராணிப்பேட்டை மேற்கு மாவட்ட செயலாளர் எஸ்.எம்.சுகுமார், மாவட்ட எம்,.ஜி. ஆர்.இளைஞர் அணி செயலாளர் சுமைதாங்கி சி.ஏழுமலை ஆகியோர் கலந்து கொண்டு பேசினார்கள். இந்த விழாவில் மாவட்ட துணை செயலாளர் வேதகிரி, மாவட்ட சிறுபான்மை பிரிவு செயலாளர் கே.அப்துல்லா, இளைஞர் பாசறை செயலாளர் அமர்பாரூக்,ஆற்காடு மேற்கு ஒன்றிய செயலாளர் தாழனூர் சாரதி,மேல்விஷாரம் நகரமன்ற உறுப்பினர் ஹமிதாபானு சேட்டு நிர்வாகிகள் ஷபீக் அஹமது, மஸ்தான் அலி, சர்ப்ராஸ் உள்பட அதிமுகவினர் பலர்கலந்து கொண்டனர்.

# புதுச்சேரியில் தேசிய நிகழ்வுகள் குறை தீர்வு ஆணையம் மூலம் ரூ. 4,68,000 க்கு தீர்வு



**புதுச்சேரி மார்ச் 30**

மத்திய அரசு நுகர்வோர் விவகாரங்கள் துறை மற்றும் தேசிய நிகழ்வுகள் பூசல்கள் குறை தீர்வு ஆணைய உத்தரவு மற்றும் வழிகாட்டுதலின்படி நுகர்வோர் புகார்களை கால நேரத்திற்கு செயல் முனைப்போடு கையாளப்பட்டு விரைவாக தீர்வு காண வேண்டுமென்று *GRAHAK MA DHYASTATHA SAMADHAN* ( கிரகத் மத்தியஸ்தா சமாதன்) என்ற ஒரு நாடு தழுவிய அமைப்பு மத்திய அரசு நுகர்வோர் விவகாரங்கள் துறை மூலம் ஏற்படுத்தப்பட்டு அந்த முனைப்பின்படி நுகர்வோர் குறை தீர்ப்பு ஆணையத்தில் தேங்கி வரும் புகார்களை குறிப்பிட்ட கால கட்டத்தில் தீர்வு காண வேண்டும் என்ற அடிப்படை நோக்கத்துடன் புதுவை யூனியன் பிரதேசத்தில் உள்ள மாவட்ட நுகர்வோர் குறை தீர்வு ஆணையத்தின் இன்று நடத்தப்பட்ட *"GRAHAK M ADHYAASTATHA SAMADHAN'* அதாவது நடுநிலையாளர் மூலம் நுகர்வோர் தீர்ப்புகள் (மக்கள் நீதிமன்றம் ) மாவட்ட நுகர்வோர் ஆணைய தலைவர் முத்துவேல் தலைமையில் உறுப்பினர்கள் A. S கவிதா, G.ஆறுமுகம் ஆகியோர் அடங்கிய அமர் ஒன்று ஏற்படுத்தப்பட்டு நேற்று நடைபெற்றது இந்த மக்கள் நீதிமன்றத்தில் மாவட்ட நுகர்வோர் குறை தீர்வு ஆணையத்திலிருந்து 10 வழக்குகள் சமாதானத்திற்கானது என கண்டறியப்பட்டு அவ் வழக்குகளில் பேச்சு வார்த்தைக்கு உட்படுத்தப்பட்டது

அவ்வாறான பேச்சு வார்த்தையில் ஐந்து வழக்குகளில் உடன்படிக்கை ஏற்பட்டு அவ் வழக்குகளுக்கு நேற்று தீர்வு காணப்பட்டது இந்த நிகழ்வில் வழக்கறிஞர் சங்க தலைவர் C .T. ரமேஷ், பொதுச் செயலாளர் நாராயணகுமார், பொருளாளர் ராஜ பிரகாஷ் மேலும் மூத்த வழக்கறிஞர்கள் இளஞ்செழியன், விமல்,ரவிக்குமார், சுப்ரமணி, ராமநாதன், வடிவேல், செல்வகுமார் மற்றும் பிரதாபன் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

மேலும் புதுச்சேரி சட்டக் கல்லூரி மாணவர்கள் 50க்கும் மேற்பட்ட வழக்காலிகள் கலந்து கொண்டனர் மக்கள் நீதிமன்ற நிகழ்வில் காப்பீடு நிறுவனம் மற்றும் பொதுத் துறை வங்கி அதிகாரிகள் மற்றும் தனியார் நிர்வாகிகள் கலந்து கொண்டனர் நேற்றைய மக்கள் நீதிமன்ற மூலம் ரூபாய் 4,68,000

மட்டும் முறையீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டது இந்நிகழ்ச்சிக்கு நுகர்வோர் குறை தீர்வு ஆணைய பதிவாளர் விஜயா ரவீந்திரன் மற்றும் ஊழியர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
No. 61, Cuddalore Main Road, Mudaliyarpet, Puducherry-4.
Ph:0413-2280613
E-Mail: pondyedi@thinaboomi.com
RNI.Regn No.Pontam 2002/7660
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# அரக்கோணம் 11-வது வார்டில் பூத் கமிட்டி நிர்வாகிகள் கூட்டம்

**அரக்கோணம் மார்ச், 30**

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் நகரம் 11 வது வார்டு அதிமுக சார்பில் பூத் கமிட்டி நிர்வாகிகள் நியமனம் கூட்டம் நடைபெற்றது கூட்டத்திற்கு வட்ட செயலாளர் ஏ டி ராஜேஷ் தலைமை தாங்கினார்

மருதராஜ் தாமு முன்னிலை வகித்தனர் தேர்தல் பொறுப்பாளர் அம்மனூர் கே ஆர் சீனிவாசன் வரவேற்றார் கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக அமைப்புச் செயலாளர் கே. அரி மாவட்ட செயலாளர் சு.ரவி எம்எல்ஏ மற்றும் மாநில இளம் பாசறை துணைச் செயலாளர் ஷயாம் குமார் நகர செயலாளர் பாண்டுரங்கன் உட்பட பலர் கலந்து கொண்டனர் மேலும் மீனவரணி செல்வம் எம் ஜி ஆர் இளைஞர் அணி பாலு நகர மகளிர் அணி செயலாளர் டாக்டர் சுகந்தி வினோதினி வைரல் டிவி லட்சுமணன் ஹரிஷ் குமார் உள்ளிட்ட பலரும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

**கண், ரத்த தானம் செய்வீர்**



**தண்டராம்பட்டு மேற்கு ஒன்றிய திமுக சார்பில் 100 நாள் வேலை திட்டத்திற்கு நிதி வழங்காத ஒன்றிய அரசை கண்டித்து நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்ட தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன் பேசினார். அருகில் ஒன்றிய செயலாளர் பன்னீர்செல்வம், பொதுக்குழு உறுப்பினர் தண்டபாணி, சுற்றுச்சூழல் அணி மாவட்ட தலைவர் முத்துமாறன் உட்பட பலர் உள்ளனர்.**

### பாதுகாப்பு காரணங்களுக்காக
# கொல்கத்தா - லக்னோ போட்டி ஏப். 8-ம் தேதிக்கு திடீர் மாற்றம்

**கொல்கத்தா, மார்ச் 30-**



பாதுகாப்பு காரணங்களுக்காக கொல்கத்தா - லக்னோ ஐ.பி.எல். போட்டி ஏப்ரல் 8-ம் தேதிக்கு திடீரென மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**பி.சி.சி.ஐ அறிவிப்பு...**

நடப்பு ஐ.பி.எல். தொடரில் கொல்கத்தாவிலுள்ள ஈடன் கார்டன்ஸ் திடலில் ஏப். 6-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறுவதாக இருந்த கொல்கத்தா நைட் ரைடர்ஸ் - லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணிகளுக்கு இடையிலான ஆட்டம், ஏப். 8-ம் தேதிக்கு மாற்றப்பட்டிருப்பதாக பி.சி.சி.ஐ. அறிவித்துள்ளது.

**உரிய பாதுகாப்பு....**

நடப்பு ஐ.பி.எல். தொடரின் 19-ஆவது ஆட்டத்தில் மேற்கண்ட இவ்விரு அணிகளும் பலப்பரீட்சை நடத்தவுள்ளன. இந்த நிலையில், ஏப். 6-ஆம் தேதி கொல்கத்தாவில் பொதுநிகழ்ச்சிகள் பல நடைபெறவுள்ளதாகவும் இதன்காரணமாக அன்றைய நாளில் நடைபெறும் ஐ.பி.எல். ஆட்டங்களுக்கு காவல் துறை தரப்பிலிருந்து உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து தர இயலாது என்பதை சுட்டிக்காட்டியிருப்பதைத் தொடர்ந்து, பாதுகாப்பு காரணங்களுக்காக கே.கே.ஆர். - எல்.எஸ்.ஜி. அணிகளுக்கு இடையிலான ஆட்டம், ஏப். 8-ஆம் தேதி பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஐ.பி.எல். வரலாற்றில்
# ரவீந்திர ஜடேஜா புதிய சாதனை

**சென்னை, மார்ச் 30-**

ஐ.பி.எல் தொடரில் யாரும் படைக்காத மிகப் பெரிய சாதனையை ஜடேஜா படைத்துள்ளார்.

**ஐ.பி.எல். தொடர்...**

ஐ.பி.எல். தொடரில் சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் - ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணிகள் மோதின. முதலில் பேட்டிங் செய்த பெங்களூரு அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டை இழந்து 196 ரன்கள் குவித்தது. தொடர்ந்து 197 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் புகுந்த சென்னை அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டை இழந்து 146 ரன்கள் மட்டுமே எடுத்தது.

**மிகப்பெரிய சாதனை...**

இதன் மூலம் 50 ரன் வித்தியாசத்தில் பெங்களூரு அபார வெற்றி பெற்றது. இந்த ஆட்டத்தில் சென்னை அணி தோல்வியை தழுவினாலும் ஐ.பி.எல் தொடரில் யாரும் படைக்காத மிகப்பெரிய சாதனை ஒன்றை சி.எஸ்.கே அணி வீரர் ஜடேஜா படைத்துள்ளார்.

அதாவது ஐ.பி.எல் தொடரில் 3 ஆயிரம் ரன்கள் மற்றும் 100-க்கும் அதிகமான விக்கெட்டுகளை எடுத்த முதல் வீரர் என்ற மகத்தான சாதனையை ஜடேஜா படைத்துள்ளார். இவருக்கு அடுத்தப்படியாக ரசல் உள்ளார்.

## 1000 ரன்கள் - 100 விக்கெட்டுகள்:

1) ரவீந்திர ஜடேஜா - 3,001 ரன்கள் மற்றும் 160 விக்கெட்டுகள்.
2) ஆண்ட்ரே ரசல் - 2,488 ரன்கள் மற்றும் 115 விக்கெட்டுகள்.
3) அக்சர் படேல் - 1,675 ரன்கள் மற்றும் 123 விக்கெட்டுகள்.
4) சுனில் நரைன் - 1,578 ரன்கள் மற்றும் 181 விக்கெட்டுகள்.
5) டுவைன் பிராவோ - 1560 ரன்கள் மற்றும் 183 விக்கெட்டுகள்.

### சென்னை அணிக்காக
# டோனி புதிய சாதனை

**சென்னை, மார்ச் 30-**

சி.எஸ்.கே. முன்னாள் கேப்டன் டோனி புதிய சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

**சி.எஸ்.கே. தோல்வி...**

சேப்பாக்கில் நேற்று முன்தினம் இரவு நடந்த போட்டியில் 17 ஆண்டுகளுக்குப் பிறகு சேப்பாக்கத்தில் சி.எஸ்.கே. அணி ஆர்.சி.பி.யிடம் தோல்வியை சந்தித்தது. ஆனால், டோனி புதிய சாதனை ஒன்றினை நிகழ்த்தியுள்ளார். முதலில் பேட்டிங் செய்த ஆர்.சி.பி. 196/7 ரன்கள் எடுத்தது. அடுத்து விளையாடிய சி.எஸ்.கே. 20 ஓவர்களில்146/8 ரன்கள் எடுத்தது. இதில் டோனி 16 பந்துகளில் 30 ரன்கள் அதிரடியாக அடித்தார். இருப்பினும் டோனி முன்பாகவே களமிறங்கி இருக்கலாம் என்ற விமர்சனம் அவர்மீது எழுந்து வருகிறது.



**புதிய சாதனை...**

சி.எஸ்.கே. அணிக்காக அதிக ரன்கள் எடுத்தவர் என்ற புதிய சாதனைக்கு சொந்தக்காரர் ஆகியுள்ளார் முன்னாள் கேப்டன் எம்.எஸ்.டோனி. இதற்கு முன்பாக சி.எஸ்.கே.வுக்காக சுரேஷ் ரெய்னா 4,687 ரன்கள் எடுத்திருந்தார். தற்போது. டோனி 4,699 ரன்கள் சி.எஸ்.கே. அணிக்காக எடுத்துள்ளார். மொத்த ஐபிஎல் தொடரிலும் 5,273 ரன்கள் எடுத்துள்ளார். கடந்த ஆண்டு கேப்டன் பொறுப்பை ருதுராஜிடம் ஒப்படைத்தார்.

அதிலிருந்து சி.எஸ்.கே. அணி விழ்ச்சியை சந்தித்து வருவது ரசிகர்களிடம் பேசு பொருளாகியுள்ளது.

## புள்ளிகள் பட்டியல்

| வரிசை | அணிகள் | ஆட்டங்கள் | வெற்றி | தோல்வி | புள்ளிகள் | நெட் ரன்ரேட் |
|---|---|---|---|---|---|---|
| 1 | பெங்களூரு | 2 | 2 | 0 | 4 | +2.226 |
| 2 | லக்னோ | 2 | 1 | 1 | 2 | +0963 |
| 3 | பஞ்சாப் | 1 | 1 | 0 | 2 | +0.550 |
| 4 | டெல்லி | 1 | 1 | 0 | 2 | +0.371 |
| 5 | ஐதராபாத் | 2 | 1 | 1 | 2 | +0.218 |
| 6 | கொல்கத்தா | 2 | 1 | 1 | 2 | -0.128 |
| 7 | சென்னை | 2 | 1 | 1 | 2 | -1.013 |
| 8 | மும்பை | 1 | 0 | 1 | 0 | -0.493 |
| 9 | குஜராத் | 1 | 0 | 1 | 0 | -0.550 |
| 10 | ராஜஸ்தான் | 2 | 0 | 2 | 0 | -1.882 |

## இன்றைய ஐ.பி.எல் (10, 11-வது லீக்)



அணிகள் - டெல்லி vs ஐதராபாத்
இடம் - விசாகப்பட்டினம் மணி - மாலை 3.30
அணிகள் - சென்னை vs ராஜஸ்தான்
இடம் - கவுகாத்தி மணி - இரவு 7.30

## ஐ.பி.எல். சூதாட்டம்: 3 பேர் கைது

நவி மும்பையில் சன்பாடா பகுதியில் ஒரு குடியிருப்பு வளாகத்தில், ஐ.பி.எல். கிரிக்கெட் மீது பந்தயம் கட்டி, ஆன்லைன் சூதாட்டம் நடத்தப்படுவதாக மும்பை காவல்துறையினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. தகவலின்பேரில், சம்பவ இடத்துக்கு சென்ற காவல்துறையினர், சூதாட்டத்தில் ஈடுபட்ட மூவரை கைது செய்தனர். மேலும், ரூ. 2.6 லட்சம் மதிப்பிலான மின்னணு சாதனங்களையும் பறிமுதல் செய்தனர்.

கைது செய்யப்பட்ட மூவர் மீதும் மகாராஷ்டிர சூதாட்டத் தடுப்புச் சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டது. மேலும், சூதாட்டத்தில் ஈடுபட்ட மற்றவர்கள் குறித்து அவர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாக காவல்துறையினர் கூறினர்.

## தெற்கு ஆஸ்திரேலியாவுக்கு கோப்பை

ஷெபீல்ட் ஷீல்ட் கிரிக்கெட் போட்டி ஆஸ்திரேலியாவில் நடைபெறும் உள்நாட்டு கிரிக்கெட் போட்டியாகும். இந்தியாவில் நடக்கும் ரஞ்சி கோப்பை மாதிரி பிரபலமான தொடரகும். இந்தத் தொடரில் ஆஸி.யின் 6 மாகாணங்களில் இருந்து அணிகள் விளையாடும். 10 போட்டிகளில் இந்த அணிகள் விளையாடும். இதன் இறுதிப் போட்டிகளில் தெற்கு ஆஸ்திரேலியா, குயின்ஸ்லான்ட் அணிகள் மோதின.

இதில் குயின்ஸ்லான்ட் முதலிரண்டு இன்னிங்ஸ்களில் 95, 445 ரன்கள் எடுத்தது. தெ.ஆஸி. முதலிரண்டு இன்னிங்ஸ்களில் முறையே 270, 271/6 ரன்கள் எடுத்தது. இதில் இரண்டு இன்னிங்ஸ்களிலும் 11 விக்கெட்டுகள் எடுத்த பிரன்டன் டாகெட் ஆட்ட நாயகனாக தேர்வு செய்யப்பட்டார். இந்த ஷெபீல்ட் ஷீல்ட் கோப்பையை 29 ஆண்டுகள் கழித்து தெற்கு ஆஸ்திரேலியா வென்றுள்ளது இதற்கு முன்பாக 1990-1991இல் 232/2 ரன்களை சேஸ் செய்து விக்டோரியா அணி கோப்பையை வென்றிருந்தது.

## டோனி குறித்து வாட்சன்

சேப்பாக்கில் நடந்த போட்டியில் 17 ஆண்டுகளுக்குப் பிறகு சி.எஸ்.கே. அணி ஆர்.சி.பி.யிடம் தோல்வியைச் சந்தித்தது. முதலில் பேட்டிங் செய்த ஆர்.சி.பி. 196/7 ரன்கள் எடுக்க அடுத்து விளையாடிய சி.எஸ்.கே. 20 ஓவர்களில்146/8 ரன்கள் எடுத்தது. இதில் டோனி 16 பந்துகளில் 30 ரன்கள் எடுத்து அசத்தினார். இருப்பினும் டோனி முன்னதாகவே களமிறங்கி இருக்கலாம் என்ற விமர்சனம் அவர்மீது எழுந்து வருகிறது.

இந்நிலையில் நிகழ்ச்சி ஒன்றில் வாட்சன் பேசியதாவது: 16 பந்துகளில் 30 ரன்களை அடித்தார் டோனி. இதைப் பார்க்கதான் சி.எஸ்.கே. ரசிகர்கள் வருகிறார்கள். டோனி இன்னமும் வரிசையில் முன்னதாக களமிறங்கினால் எனக்கு மகிழ்ச்சியாக இருக்கும். எனது கருத்துபடி, அஸ்வினுக்கு முன்பாக டோனி களமிறங்கியிருக்க வேண்டும்.

கூடுதலாக 15 பந்துகளை டோனி பிடித்திருக்க வேண்டும். கடைசி சில ஆண்டுகளில் தன்னால் அழகாக விளையாட முடியுமென தொடர்ச்சியாக நிரூபித்து வருகிறார். எப்படியாகினாலும் இது டோனிக்கு புதியது கிடையாது. ஓய்வுபெற்றபிறகு கடைசி சீசனிலும் கடைசியாகத்தான் விளையாடினார். தற்போதைக்கு, சி.எஸ்.கே. அணியில் சமநிலை இல்லை. டோனி விக்கெட் கீப்பிங்கில் சிறப்பாக இருக்கிறார். அவரை முன்னதாக இறக்கியிருந்தால் வென்றிருக்கலாம் என்றார்.

## மியாமி ஓபன்: ஜோகோவிச் முன்னேற்றம்

மியாமி ஓபனில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச் அரையிறுதியில் வென்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். இந்தப் போட்டியில் 6-2, 6-3 என ஜோகோவிச் கிரிகோர் டிமிட்ரியை வீழ்த்தினார். இந்தப் போட்டியைப் பார்க்க ஆர்ஜென்டீன கால்பந்து வீரரும் இன்டர் மியாமி வீரருமான மெஸ்ஸி வந்திருந்தார். நடப்பு சாம்பியனான ஆர்ஜென்டீனா அணி 2026 உலகக் கோப்பைக்கு தகுதி பெற்றுள்ளது. ரசிகர்கள் பலரும் மெஸ்ஸியுடன் புகைப்படங்களை எடுத்துகொண்டனர்.

ஜோகோவிச் இறுதிப் போட்டியில் மென்சிக் உடன் மோதுகிறார். இந்தப் போட்டி இன்று (மார்ச்.30) நடைபெறவிருக்கிறது. 37 வயதாகும் ஜோகோவிச் தனது 100ஆவது பட்டத்துக்காக காத்திருக்கிறார். மியாமி ஓபனில் வென்றால் அந்தச் சாதனையும் நிகழ்ந்துவிடும். ஏற்கனவே, அதிக கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள் வென்றவராக ஜோகோவிச் இருப்பது குறிப்பிடத்தக்கது.

## ரெய்னாவின் சாதனை முறியடிப்பு

ஐ.பி.எல். தொடரில் சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் - ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணிகள் மோதின. முதலில் பேட்டிங் செய்த பெங்களூரு அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டை இழந்து 196 ரன்கள் குவித்தது. தொடர்ந்து 197 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் புகுந்த சென்னை அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டை இழந்து 146 ரன்கள் மட்டுமே எடுத்தது.

இதன் மூலம் 50 ரன் வித்தியாசத்தில் பெங்களூரு அபார வெற்றி பெற்றது. இந்த ஆட்டத்தில் சென்னை விக்கெட் கீப்பர் டோனி 16 பந்தில் 30 ரன்கள் எடுத்தார். இதன் மூலம் அவர் சுரேஷ் ரெய்னாவின் சாதனை ஒன்றை முறியடித்துள்ளார். அதாவது, ஐ.பி.எல். தொடரில் சென்னை அணிக்காக அதிக ரன் அடித்தவர் என்ற சுரேஷ் ரெய்னாவின் (4687 ரன், 171 இன்னின்ஸ்) சாதனையை எம்.எஸ். டோனி (4699 ரன், 204 இன்னிங்ஸ்) முறியடித்துள்ளார்.

## நேபாள அணிக்கு புதிய பயிற்சியாளர்

நேபாள கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளராக இருந்த மாண்டி தேசாய் கடந்த பிப்ரவரி மாதத்துடன் பதவி விலகினார். இதனையடுத்து புதிய தலைமை பயிற்சியாளரை தேடும் பணியில் நேபாள கிரிக்கெட் வாரியம் இறங்கியது.

இந்நிலையில் நேபாள கிரிக்கெட் அணியின் புதிய தலைமை பயிற்சியாளராக ஆஸ்திரேலிய முன்னாள் பேட்ஸ்மேன் ஸ்டூவர்ட் லா நியமிக்கப்பட்டுள்ளார். இவரது பதவிக்காலம் 2 ஆண்டுகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## கால்பந்து பயிற்சியாளர் நீக்கம்

உலகக் கோப்பை தகுதிச் சுற்றில் ஆர்ஜென்டீனாவுடனான தோல்வியினால் பிரேசில் பயிற்சியாளர் நீக்கப்பட்டுள்ளார். தென்னமரிக்க கூட்டமைப்பில் 10 அணிகளில் டாப் 6 அணிகள் நேரடியாக தகுதிபெறும். பிரேசில் தற்போது இந்தப் புள்ளிப் பட்டியலில் 5ஆவது இடத்தில் இருக்கிறது.

62 வயதாகும் பயிற்சியாளர் டோரிவல் ஜூனியரின் பதவிக்காலம் முடிந்ததாக கூட்டமைப்பு கூறியுள்ளதாக ரோட்ரிக்ஸ் கூறினார். இவருடைய பதவிக்காலத்தில் பிரேசில் அணி 7 வெற்றி, 7 டிரா, 2 தோல்விகளை சந்தித்துள்ளன. கடைசி 4இல் ஒரு தோல்வியும் 25 கோல்கள் அடித்தும் 17 கோல்கள் விடுக்கொடுத்தும் இருக்கிறது பிரேசில் அணி.

கடந்தாண்டு கோபா அமெரிக்கா காலிறுதியில் பெனால்டி வாய்ப்பில் பிரேசில் வெளியேறியது. 2030 வரை ரோட்ரிக்ஸ் கூட்டமைப்பின் தலைவராக இருப்பார். ரியல் மாட்ரிட் பயிற்சியாளர் கார்லோ அன்செலட்டி, அல்-ஹிலால் பயிற்சியாளர் ஜார்ஜ் ஜீசஸை நியமிக்க பிரேசில் முடிவுசெய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த இருவருக்கும் அடுத்த மாதம் கிளப் உலகக் கோப்பை போட்டிகள் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஆதிதிராவிட மாணவர்களுக்கான புதிய விடுதி: ஏப்ரல் 14-ம் தேதி முதல்வர் திறந்து வைக்கிறார்

**சென்னை, மார்ச் 30-**

சென்னையில் ரூ.44.50 கோடியில் கட்டப்பட்டுள்ள ஆதிதிராவிடர், பழங்குடியின மாணவர்களுக்கான புதிய விடுதியை ஏப்ரல் 14-ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மாநில அளவிலான உயர்நிலை விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில் பேசியதாவது:

“ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களின் உயர்கல்வி கனவினை நனவாக்கும் பொருட்டு சென்னை, நந்தனம், எம்.சி. ராஜா விடுதி வளாகத்தில் 10 தளங்களுடன், 121 அறைகளோடு கூடிய 500 மாணவர்கள் தங்கி பயில நவீன வசதியான நூலகம், பயிலகம், கற்றல் கற்பித்தல் அறை, உடற்பயிற்சிக்கூடம், உள் அரங்கு விளையாட்டுக்கூடம் ஆகியவற்றுடன் கூடிய புதிய விடுதி ரூ.44.50 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாளான ஏப்ரல் 14-ம் தேதி மாணவர்களின் நலனுக்காக இந்த விடுதி திறக்கப்படவுள்ளது. எனவே, இங்கே வருகை புரிந்திருக்கக்கூடிய நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தோழமைக் கட்சி உறுப்பினர்கள், தலைவர்கள் அனைவரும் திறப்பு விழாவிலே கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு இக்கூட்டத்தின் மூலமாக கேட்டுக் கொள்கிறேன்”. இவ்வாறு அவர் கூறினார்.

# நீட் ஒழிப்பு ரகசியம் வெளிவர இன்னும் எத்தனை உயிர்கள் போக வேண்டும்?
## எடப்பாடி பழனிசாமி கேள்வி

**சென்னை, மார்ச் 30-**

உதயநிதி ஸ்டாலினின் நீட் ஒழிப்பு ரகசியம் வெளிவர இன்னும் எத்தனை உயிர்கள் போக வேண்டும் என்று எடப்பாடி பழனிசாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

நீட் தேர்வு அச்சத்தால் சென்னையில் தர்ஷினி என்ற மாணவி தன் இன்னுயிரை மாய்த்துக் கொண்டதாக வரும் செய்தி அதிர்ச்சியளிக்கிறது. நீட் என்ற தேர்வை நாட்டிற்கே அறிமுகப்படுத்தி, கூட்டணி கட்சியுடன் சேர்ந்து அதனை சுப்ரீம் கோர்ட்டு வரை சென்று வாதாடி, தமிழ்நாடு மாணவர்களின் மருத்துவக் கனவை சிதைத்திட அடித்தளம் இட்டதோடு அல்லாமல், “ஆட்சிக்கு வந்தால் நீட் என்ற தேர்வே தமிழ்நாட்டில் இருக்காது” என்று பச்சைப் பொய் சொல்லி ஏமாற்றிய தி.மு.க.விற்கு தொடரும் நீட் மரணங்கள் மனசாட்சியை உறுத்தவில்லையா?

நீட் தேர்வுக்கு பலியான 19 மாணவர்களின் உயிர்களுக்கும் மு.க.ஸ்டாலின் சொல்லப்போகும் பதில் என்ன? உதயநிதி ஸ்டாலினின் நீட் ஒழிப்பு ரகசியம் வெளிவர இன்னும் எத்தனை உயிர்கள் போக வேண்டும்? தேர்தல் ஆதாயத்திற்காக சொன்ன பெரும் பொய்யால் உங்கள் கைகளில் சேர்ந்து கொண்டே இருக்கும் இரத்தக் கறைகளை எப்படி துடைக்கப் போகிறீர்கள்?

இவ்வாறு தெரிவித்தார்.

# தொகுதி மறுசீரமைப்பு விஷயத்தில் எந்த அநீதியும் செய்யப்படாது: அமித்ஷா உறுதி

**புதுடெல்லி, மார்ச் 30-**

தொகுதி மறுசீரமைப்பு விஷயத்தில் யாருக்கும் எந்த அநீதியும் செய்யப்படாது என்று அமித்ஷா கூறியுள்ளார்.

டெல்லியில் தனியார் தொலைக்காட்சி நிறுவனம் நடத்திய நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய அமித்ஷா கூறியதாவது: தென்னிந்தியாவில் மிகவும் முற்போக்கான மாநிலமாகக் கருதப்பட்ட தமிழ்நாடு, தற்போது தி.மு.க. அரசின் கொள்கையால் குழப்பத்திற்கு ஆளாகியுள்ளது. தாய்மொழியில் கல்வி பயில்வதை ஊக்குவிக்கும் தேசிய கல்விக்கொள்கையையும், மருத்துவம், பொறியல் உள்ளிட்ட படிப்புகளை தமிழ்மொழியில் கற்பிப்பது குறித்தும் தி.மு.க.விடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

ஆனால், அவர்கள் அதை தொடங்கவும் இல்லை . தொகுதி மறுசீரமைப்பு விஷயத்தில் யாருக்கும் எந்த அநீதியும் செய்யப்படாது. .அதற்கு, 0.0001 சதவீதம் கூட அநீதி நடக்க வாய்ப்பு இல்லை . அதி.மு.க.வுடனான கூட்டணி குறித்த பேச்சுவார்த்தை நடைப்பெற்று வருகிறது. சரியான நேரம் வரும்போது, அதை தெரியபடுத்துவோம்” என்றார்.

# நீட் தேர்வு விவகாரம்: இ.பி.எஸ்.க்கு அமைச்சர் தங்கம் தென்னரசு கேள்வி

**சென்னை, மார்ச் 30-**

நீட் தேர்வு விவகாரத்தில் அ.தி.மு.க. பொதுச்செயலர் எடப்பாடி பழனிசாமிக்கு அமைச்சர் தங்கம் தென்னரசு கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், ஒன்றியத்தில் இந்தியா கூட்டணியின் ஆட்சியமைந்தால் ‘நீட் தேர்வு ரத்து செய்யப்படும்’ என்று கட்சித்தலைவர் உறுதியளித்திருந்தார். அதே உறுதிமொழியை ராகுல் காந்தியையும் அளிக்கச் செய்திருந்தார்.

டில்லியில் மூன்று கார்களை மாற்றி மாற்றிச் சென்று ‘பிரத்தியேகமாக யாரையும் சந்திக்க வரவில்லை’ என்று சொல்லிவிட்டு இரவோடு இரவாக உள்துறை அமைச்சர் அமித்ஷாவைச் சந்தித்த எடப்பாடி பழனிசாமி அவர்களே!

பாஜக - அ.தி.மு.க. கூட்டணி அமையும் என்று அமித்ஷா கூடச் சொல்லியிருக்கிறார். தமிழ்நாட்டின் நலன்களே உங்களுக்கு முக்கியம் என்றால் நீட் தேர்வை ரத்து செய்தால்தான் கூட்டணி என்று உறுதியைப் பெற்றுக் கொண்டு கூட்டணி வைக்க நீங்கள் தயாரா?. இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

# மின்சாரம் தாக்கி மாணவன் பலி

**காஞ்சிபுரம், மார்ச் 30-**

காஞ்சிபுரத்தில் குளிப்பதற்காக ‘ஹீட்டர்’ போட்ட போது மின்சாரம் தாக்கியதில் 6-ம் வகுப்பு மாணவன் உயிரிழந்தார்.

காஞ்சிபுரம் மாவட்டம் படப்பை அருகே உள்ள மணிமங்கலம் பஜனை கோவில் தெருவைச் சேர்ந்தவர் சுரேஷ். இவருடைய மகன் தமிழரசன் (12 வயது). இவர், அதே பகுதியில் உள்ள தனது பாட்டி வீட்டில் தங்கி, மணிமங்கலம் பகுதியில் உள்ள அரசு பள்ளியில் 6- ம் வகுப்பு படித்து வந்தார். நேற்றுமுன்தினம் 10-ம் வகுப்பு பொதுத்தேர்வு என்பதால் மதியம் பள்ளிக்கு செல்வதற்காக பாட்டி வீட்டில் உள்ள குளியலறையில் வெந்நீர் போட்டு குளிப்பதற்காக பாத்திரத்தில் தண்ணீர் பிடித்து அதில் ‘ஹீட்டர்’ போட்டு இருந்தார்.

பின்னர் தண்ணீர் சூடாகி விட்டதா? என்பதை அறிய, பாத்திரத்துக்குள் கை வைத்த போது, தமிழரசன் மின்சாரம் தாக்கி பலியானார். இந்த சம்பவம் தொடர்பாக மணிமங்கலம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### சனிப்பெயர்ச்சியை முன்னிட்டு
# திருநள்ளாறு கோவிலில் பக்தர்கள் கூட்டம்

திருநள்ளாறு, மார்ச் 30-

சனிப்பெயர்ச்சியை முன்னிட்டு திருநள்ளாறு கோவிலில் பக்தர்களின் கூட்டம் அலைமோதியது.

திருக்கணிதப் பஞ்சாங்கப்படி சனி பகவான் நேற்று (29.03.2025) கும்ப ராசியில் இருந்து மீன ராசிக்கு மாறுகிறார். மீன ராசிக்கு வரும் சனி பகவான் தொடர்ந்து 03.06.2027 வரை இரண்டரை வருட காலத்துக்கு இந்த ராசியில் சஞ்சாரம் செய்து அருளாசி வழங்குவார். மீன ராசியில் இருந்து தனது மூன்றாம் பார்வையால் ரிஷப ராசியையும், ஏழாம் பார்வையால் கன்னி ராசியையும், பத்தாம் பார்வையால் தனுசு ராசியையும் பார்க்கிறார்.

இந்த இடப்பெயர்ச்சியை கணித்து பலன்கள் சொல்லப்பட்டு வருகின்றன. அதேசமயம் வாக்கிய பஞ்சாங்கத்தின்படி 2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 6-ம் தேதி சனிப்பெயர்ச்சி நிகழும் என கணிக்கப்பட்டுள்ளது. திருக்கணிதப் பஞ்சாங்கப்படி கணிக்கப்பட்டுள்ள சனிப்பெயர்ச்சி தொடர்பாக தகவல்கள் வெளியான நிலையில், தமிழகத்தில் சனி பகவான் வீற்றிருக்கும் திருநள்ளாறு உள்ளிட்ட ஆலயங்களில் சனிப்பெயர்ச்சி வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

சனிப்பெயர்ச்சியை ஒட்டி திருநள்ளாறு கோவிலில் பக்தர்களின் கூட்டம் அலைமோதி வருகிறது. அங்கு 3 மணி நேரத்திற்கு மேலாக காத்திருந்து பக்தர்கள் சாமி தரிசனம் செய்து வருகின்றனர்.

வெள்ளி கவச அலங்காரத்தில் சனீஸ்வர பகவான் பக்தர்களுக்கு அருள்பாலித்து வருகிறார். நள தீர்த்தத்தில் புனித நீராடி எள் தீபம் ஏற்றி பக்தர்கள் வழிபட்டு வருகின்றனர்.

## அரியானா அணி சாம்பியன்

தேசிய மகளிர் ஆக்கி தொடர் ராஞ்சியில் நடைபெற்றது. இதில் ஒடிசா, மராட்டியம், மத்திய பிரதேசம், மணிப்பூர், அரியானா, மிசோரம், ஜார்கண்ட் மற்றும் பெங்கால் ஆகிய 8 அணிகள் கலந்து கொண்டன. இதன் லீக் சுற்று முடிவில் அதிக புள்ளிகளை பெற்ற அரியான மற்றும் ஒடிசா அணிகள் இறுதிப்போட்டிக்கு முன்னேறின. அடுத்த இரண்டு இடங்களை பிடித்த ஜார்கண்ட் மற்றும் மத்திய பிரதேச அணிகள் 3-வது இடத்திற்கான போட்டியில் விளையாடின. மற்ற அணிகள் தொடரிலிருந்து வெளியேறின.

நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப்போட்டியில் ஒடிசாவை 3-2 என்ற கோல் கணக்கில் வீழ்த்திய அரியானா அணி சாம்பியன் பட்டம் வென்றது. முன்னதாக நடைபெற்ற ஆட்டத்தில் மத்திய பிரதேசத்தை வீழ்த்தி ஜார்கண்ட் 3-வது இடம் பெற்றது.

# உலக தண்ணீர் தினத்தை முன்னிட்டு நாவினிபட்டியில் கிராம சபை கூட்டம்

## மாவட்ட கலெக்டர் சங்கீதா பங்கேற்பு



**மேலூர், மார்ச் 30-**

உலக தண்ணீர் தினத்தை முன்னிட்டு மேலூர் ஊராட்சி ஒன்றியம், நாவினிப்பட்டி ஊராட்சியில் கிராம சபை கூட்டம் நேற்று நடைபெற்றது.

மதுரை மாவட்ட கலெக்டர் சங்கீதா தலைமை தாங்கினார். நாவினிப்பட்டி மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் இருந்து ஏராளமான பொது மக்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனுக்களை அளித்தனர். கிராம சபை கூட்டத்தில் கூடுதல் கலெக்டர் டாக்டர் மோனிகா ரானா, உதவி இயக்குநர் ஊராட்சிகள் அரவிந்த், ஊரக வளர்ச்சி செயற்பொறியாளர் இந்துமதி, மேலூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சுந்தரசாமி ரத்தின கலாவதி, மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சுப்புராஜ், மேலூர் தாசில்தார் செந்தாமரை, வெள்ளலூர் வட்டார மருத்துவ அலுவலர் அம்பலம் சிவனேஷ், குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் ரதிதேவி, நெடுஞ்சாலைத்துறை இளநிலை பொறியாளர் இந்திரா பிரியதர்ஷினி, நாவினிப்பட்டி ஊராட்சி செயலர் இளையராஜா, காரைக்குடி சேது பாஸ்கரா வேளாண்மை கல்லூரி மாணவிகள், மதுரை வேளாண்மை கல்லூரி மாணவிகள், பொதுமக்கள் மற்றும் அனைத்து அரசு துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## பெரிய பொட்டல்பட்டி கிராமத்தில்

# உலக தண்ணீர் தினத்தை முன்னிட்டு கிராம சபை கூட்டம்: கலெக்டர் பங்கேற்பு



**விருதுநகர், மார்ச் 30-**

விருதுநகர் மாவட்டம், சிவகாசி ஊராட்சி ஒன்றியம், பெரிய பொட்டல்பட்டி கிராமத்தில், உலக தண்ணீர் தினத்தை முன்னிட்டு, கிராம சபைக் கூட்டம் மாவட்ட கலெக்டர் ஜெயசீலன் தலைமையில் நடைபெற்றது. இக்கிராமசபை கூட்டத்தில் வான்தரும் மழைநீரினை சேகரித்தல், சிக்கனமாக தண்ணீரைப் பயன்படுத்துதல், உடைந்த குழாய்களை சரி செய்து நீர் வீணாகாமல் பாதுகாத்தல், மறுசுழற்சிக்கு உட்படுத்துதல், நிலத்தடிநீரை செறியூட்டுதல், நீரின் தூய்மையை பாதுகாத்தல் மற்றும் நீர் மாசுக்கட்டுப்பட்டைத் தடுத்தல், மரம் வளர்த்தலை ஊக்குவித்தல், வீட்டுக்கொருமரம் வளர்த்தல், நீர்நிலைகளில் ஆக்கிரமிப்பை அகற்றி புனரமைத்தல், நிலைகளின் தண்ணீர் சேகரமாக உரிய கால்வாய்களை தூர்வாரி புனரமைத்தல், நீரின் முக்கியத்துவத்தை குழந்தைகளிடம் எடுத்துக்கூறுதல், கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது நிதி செலவினம் (01.04.2024 முதல் 28.02.2025 வரை), கிராம ஊராட்சியின் தணிக்கை அறிக்கை, சுத்தமான குடிநீர் விநியோகத்தினை உறுதி செய்வது, மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி, தரைமட்ட நீர் தேக்கத் தொட்டி மாதம் இருமுறை சுத்தம் செய்தல் பிரதிமாதம் 5- ம் தேதி மற்றும் 20- ம் தேதி) தினமும் தகுந்த அளவு குடிளோரின் கலந்து குடிநீர் விநியோகத்தினை உறுதிசெய்தல் உள்ளிட்ட பொருட்கள் குறித்து விவாதிக்கப் பட்டது.

முன்னதாக, வேளாண்மைத்துறையின் மூலமாக நுண்ணீர் பாசனத்திற்கான மானியத்தொகையினையும், இடுப்பொருட்களையும் மாவட்ட கலெக்டர் அவர்கள் வழங்கினார். தூய்மை பணியாளர்கள் மற்றும் சிறப்பாக பணியாற்றிய ஊராட்சி பணியாளர்களை மாவட்ட கலெக்டர் அவர்கள் சால்வை அணிவித்து கௌரவித்தார். இந்நிகழ்ச்சியில், திட்ட இயக்குநர் தண்டபாணி, சார் ஆட்சியர் ப்ரியா ரவிச்சந்திரன், உதவி இயக்குநர் அரவிந்த் உட்பட பல்வேறு துறை சார்ந்த அரசு அலுவலர்கள், வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், கிராம பொதுமக்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பரமக்குடி முத்தாலபரமேஸ்வரி அம்மன் கோவில் பூச்சொரிதல் விழா



**பரமக்குடி, மார்ச் 30-**

ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பரமக்குடி அருள்மிகு முத்தாலபரமேஸ்வரி அம்மன் கோவில் பூச்சொரிதல் விழா 1953-ம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நிலையில் நேற்று முன்தினம் அருள்மிகு முத்தாலம்மன் கோவிலின் 72 -வது ஆண்டு பூச்சொரிதல் விழா நகர் முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. பரமக்குடி ஆயிர வைசிய சபை, பூ வியாபாரிகள் நலச் சங்கம் மற்றும் பல்வேறு அமைப்புகளின் சார்பில் நகர் முழுவதும் 60-க்கும் மேற்பட்ட இடங்களில் முத்தாம்மன் அலங்கரித்து வைக்கப்பட்டு வண்ண வண்ண மலர்கள் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டது. பின்பு இரவு 10 மணியளவில் நகரில் ஊர்வலமாக எடுத்து சென்று கோவிலை சென்றடைந்து முத்தாலம்மனுக்கு செலுத்தினர்.

பின்பு நேற்று அதிகாலை முத்தாலம்மன் பல்வேறு அமைப்பினர் மற்றும் பக்தர்கள் செலுத்திய வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டு பக்தர்களுக்கு அருள் பாலித்தார். தொடர்ந்து விஷேச தீபாராதனைகள் நடந்தன. நகரில் பல்வேறு இடங்களில் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை கோவில் டிரஸ்டிகள் மற்றும் ஆயிர வைசிய சபை நிர்வாகிகள் செய்து இருந்தனர்.

# போடி காமன் ஊராட்சியில் கிராம சபை கூட்டம் நடந்தது



**வத்தலகுண்டு, மார்ச் 30-**

போடி காமன் ஊராட்சியில் கிராம சபை கூட்டம் நடைபெற்றது.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியம் போடிக் காமன் வாடி ஊராட்சியில் சிறப்பு கிராம சபை கூட்டம் நடைபெற்றது. ஊராட்சி செயலர் திருப்பதி தலைமை வகித்தார் ஒன்றிய மேற்பார்வை பொறியாளர் மிதிலேஷ்வரன் பற்றாளராக கலந்து கொண்டார்.

கூட்டத்தில் உலக தண்ணீர் தினம் ஊராட்சி வரவு செலவு தாக்கல் 100 நாள் வேலை திட்ட பணிகள் குறித்த அறிக்கை, கலைஞர் நினைவு இல்லம் மற்றும் இதர பொருட்கள் குறித்து கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டார்கள் கலந்து கொண்ட அனைவருக்கும் ஊராட்சி செயலர் திருப்பதி நன்றி கூறினார்.

# தமிழ்நாட்டு மக்களுக்காக போராடக்கூடிய ஒரே இயக்கம் தி.மு.க: சேடபட்டி மு.மணிமாறன் பேச்சு



**திருமங்கலம், மார்ச் 30-**

தமிழக மக்களுக்காக போராடக்கூடிய ஒரே இயக்கம் தி.மு.க மட்டுமே என மத்திய அரசைக் கண்டித்து செக்கானூரணியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மதுரை தெற்கு மாவட்ட திமுக செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் பேசினார்.

தமிழ்நாடு முதல்வர், தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின், துணை முதலமைச்சர், இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆணைக்கிணங்க மதுரை தெற்கு மாவட்ட திமுகவிற்கு உட்பட்ட ஒன்றிய கழகங்களில் நேற்று காலை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் 100 நாள் வேலைக்கு தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய ரூ.4034 கோடி நிதியை வழங்காமல் தொடர்ந்து தமிழ்நாட்டை வஞ்சித்து வரும் மத்திய பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றது. இதன் ஒரு பகுதியாக திருமங்கலம் தொகுதி செக்கானூரணி தேவர் சிலை அருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் கலந்து கொண்டு பேசியதாவது:-

நூறு நாள் வேலை உறுதி திட்டத்தின் கீழ் தமிழக மக்களுக்கு கடந்த 4 மாதங்களாக வரவேண்டிய ஊதியம் 4 ஆயிரம் கோடியை மத்திய மோடி அரசு நிறுத்தி விட்டது. தங்களுக்கு வாக்களிக்கவில்லை என்பதற்காக தமிழக மக்களை மத்திய பாஜக அரசு வஞ்சித்து வருகிறது. இதற்காகத்தான் மதுரை தெற்கு மாவட்ட திமுக சார்பில் 38 இடங்களில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது. கார்ப்பரேட் கம்பெனிகளுக்கு ஆதரவாக 25 லட்சம் கோடி கடனை தள்ளுபடி செய்த மோடி அரசு தமிழக மக்களுக்கு சம்பள பாக்கியை தராமல் சோதித்து வருகிறது. இந்த பிரச்சனையை அ.தி.மு.க. கண்டு கொள்ளாமல் விட்டு விட்டது. இருப்பினும் தமிழக மக்களுக்காக, தமிழகத்தின் உரிமைகளுக்காக போராடக் கூடிய ஒரே இயக்கம் தி.மு.க மட்டுமே. தமிழகத்தில் பெண்கள் பயன் பெற்றிடும் வகையில் முதல்வர் ஸ்டாலின் பல்வேறு சிறப்பு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். மத்திய அரசு நிதி ஒதுக்கினாலும் ஒதுக்காவிட்டாலும் தமிழக மக்களின் நலனுக்காக நாடு போற்றிடும் நல்லாட்சியை முதல்வர் ஸ்டாலின் நிச்சயம் வழங்கிடுவார். அதற்கு நீங்கள் அனைவரும் ஆதரவளித்திட வேண்டும் என்று பேசினார்.

இதே போல் திருமங்கலம் மேற்கு ஒன்றியம் செக்கானூரணி, கரடிக்கல் ஆகிய இடங்களில் ஒன்றிய செயலாளர் தனபாண்டியன், திருமங்கலம் கிழக்கு ஒன்றியம் கப்பலூர், விடத்தக்குளம் ஆகிய இடங்களில் ஒன்றிய கழக செயலாளர் தங்கப்பாண்டியன், திருமங்கலம் தெற்கு ஒன்றியம் ஆலம்பட்டி, மீனாட்சிபுரம் ஆகிய இடங்களில்ஒன்றிய செயலாளர் ஆலம்பட்டி சண்முகம், கள்ளிக்குடி வடக்கு ஒன்றியம் மருதங்குடி, செங்கப்படை ஆகிய இடங்களில் ஒன்றிய செயலாளர் இராமமூர்த்தி, கள்ளிக்குடி தெற்கு ஒன்றியம் கள்ளிக்குடி, வில்லூர் ஆகிய இடங்களில் ஒன்றிய கழக செயலாளர் பா.மதன்குமார், தே.கல்லுப்பட்டி வடக்கு ஒன்றியம் வன்னிவேலம் பட்டி, சின்னா ரெட்டிபட்டி ஆகிய இடங்களில் ஒன்றிய செயலாளர் நாகராஜன், தே.கல்லுப்பட்டி கிழக்கு ஒன்றியம்டி. குன்னத்தூர், கொல்லவீரம்பட்டி ஆகிய இடங்களில் ஒன்றிய செயலாளர் பாண்டியன், தே.கல்லுப்பட்டி தெற்கு ஒன்றியம் சந்தையூர், சிலைமலைப்பட்டி ஆகிய இடங்களில் ஒன்றிய செயலாளர் தனசேகரன் ஆகியோரது தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் எழுச்சியுடன் நடைபெற்றது. இதில் கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் உள்ளிட்ட ஆயிரக் கணக்கானோர் கலந்து கொண்டு நிதி தர மறுக்கும் மத்திய அரசைக் கண்டித்து கோஷங்களை எழுப்பினர்.

# நத்தம் வத்திபட்டியில் தி.மு.க. சார்பில் ஆர்ப்பாட்டம்





**நத்தம், மார்ச் 30-**

மத்திய அரசை கண்டித்து தி.மு.க. சார்பில் ஆர்ப்பாட்டம்திண்டுக்கல் மாவட்டம் நத்தம், வத்திபட்டி, செந்துறை மற்றும் சிறுகுடி- தேத்தாம்பட்டியில் தி.மு.க. சார்பாக மத்திய அரசை கண்டித்து ஆர்ப்பாட்டங்கள் நடந்தது. இதற்கு முன்னாள் எம்.எல்.ஏ ஆண்டிஅம்பலம், ஒன்றிய செயலாளர்கள் ரத்தினக்குமார், பழனிச்சாமி ஆகியோர் தலைமை தாங்கினர். நகர செயலாளர் ராஜ்மோகன், நத்தம் பேரூராட்சி தலைவர் சேக்சிக்கந்தர்பாட்சா, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் இப்ரில்ஆசித், நகர அவைத் தலைவர் சரவணன், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் ராஜகோபால் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் நூறுநாள் வேலை திட்ட நிதியை வழங்காத மத்திய அரசை கண்டித்தும், உடனடியாக வழங்க கோரியும் கோஷங்கள் எழுப்பபட்டது. ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பவுர், மாவட்ட பிரதிநிதி குடகிப்பட்டி அழகர்சாமி, கவுன்சிலர் இஸ்மாயில், தகவல் தொழில்நுட்பஅணி ஒருங்கிணைப்பாளர் வாசுதேவன், நிர்வாகிகள் அயூப்கான் உதயகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# தேவரப்பன்பட்டி ஊராட்சியில் சிறப்பு கிராம சபை கூட்டம்



**வத்தலக்குண்டு, மார்ச் 30-**

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியம் தேவரப்பன்பட்டி ஊராட்சியில் சிறப்பு கிராம சபை கூட்டம் நடைபெற்றது. ஊராட்சி செயலர் கண்ணன் தலைமை வகித்தார் ,, முனியாண்டி பற்றாளராக கலந்து கொண்டார். கூட்டத்தில் உலக தண்ணீர் தினம் ஊராட்சி வரவு செலவு தாக்கல் 100 நாள் வேலை திட்ட பணிகள் குறித்த அறிக்கை, கலைஞர் நினைவு இல்லம் மற்றும் இதர பொருட்கள் குறித்து கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டார்கள் கலந்து கொண்ட அனைவருக்கும் ஊராட்சி செயலர் கண்ணன் நன்றி கூறினார்.

கண் தானம் செய்வீர்

# கிழையூரில் மத்திய அரசை கண்டித்து தி.மு.க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்



**மேலூர், மார்ச் 30-**

மத்திய அரசை கண்டித்து தி.மு.க. சார்பில் கிழையூரில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. 100 நாள் வேலை உறுதி திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய ரூ.4034 கோடி நிதியை வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ச்சியாக வஞ்சித்து வரும் மத்திய பாஜக அரசைக் கண்டித்து மேலூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் நேற்று மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் கீழையூர் மற்றும் வண்ணாம்பாறைபட்டியில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் மேலூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் பாலகிருஷ்ணன், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் நாவினிபட்டி வேலாயுதம், மேலூர் பொதுக்குழு உறுப்பினர் செல்வராஜ், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் சாத்தமங்கலம் ரகு, நாவினிபட்டி பீர்முகமது, மாவட்ட பிரதிநிதி ஜெகன் குமார், கிளை செயலாளர் பாலகுரு, அமைப்பாளர் முத்துப்பாண்டி தனியாமங்கலம் போஸ், கீழையூர் கண்ணன், அவை தலைவர் மாணிக்கம், மாவட்ட பிரதிநிதி அன்பு, வண்ணாம் பாறைபட்டி மகாராஜன், கட்சி தொண்டர்கள், நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



**உலக தண்ணீர் தினத்தை முன்னிட்டு மேலூர் ஒன்றியம், கோட்ட நத்தம்பட்டி ஊராட்சிக்குட்பட்ட சுப்பிரமணிய புரத்தில் கிராம சபை கூட்டம் தனி அலுவலர் தலைமையில் ஊராட்சி செயலர் சங்கையா முன்னிலையில் கூட்டம் நடைபெற்றது. இதில் அனைத்து துறை சார்ந்த அதிகாரிகள், கிராம பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.**



● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மாநில அளவிலான உயர்நிலை விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக்குழு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அமைச்சர்கள் கோவி.செழியன், சி.வி.கணேசன், மா.மதிவேந்தன், என்.கயல்விழி, தலைமைச்செயலாளர் நா.முருகானந்தனம், கூடுதல் தலைமைச்செயலாளர் தீரஜ்குமார், காவல்துறை இயக்குநர் சங்கர்ஜிவால் உள்ளனர்.



● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று காவல்துறையின் பயன்பாட்டிற்காக ரூ.32 கோடியே 9 லட்சம் செலவில் 500 இருசக்கர வாகனங்கள், 300 நான்கு சக்கர வாகனங்கள், தீயணைப்பு- மீட்புப்பணிகள் துறையின் பயன்பாட்டிற்காக ரூ.28 கோடியே 45 லட்சத்து 8 ஆயிரம் செலவிலான 50 நீர்தாங்கி வண்டிகள், 10 ஜீப்புகள், 50 இருசக்கர வாகனங்கள் ஆகியவற்றின் சேவையை முதல்வர் மு.க.ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.



● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மாநில அளவிலான உயர்நிலை விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக்குழு கூட்டத்தில் "வன்கொடுமை தடுப்புச்சட்டம் மற்றும் விதிகளுக்கான இயக்க நடைமுறை" கையேட்டினை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட அதனை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன் பெற்றுக்கொண்டார். அருகில் தலைமைச்செயலாளர் நா.முருகானந்தம் உள்ளார்.

## வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ்

# பதியப்படும் வழக்குகள் எண்ணிக்கை இந்தாண்டு ஆறு சதவீதம் குறைந்தது

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தகவல்

சென்னை, மார்ச் 30-

வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் பதியப்படும் வழக்குகள் எண்ணிக்கை இந்தாண்டு ஆறு சதவீதம் குறைந்துள்ளதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் மாநில அளவிலான உயர்நிலை விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தொடங்கியது.

அதில் உரையாற்றிய அவர், "தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் முன்னேற்றத்திற்கு பல்வேறு திட்டங்களில் நிறைவேற்றி வருகிறோம். சமூக நீதியை நிலைநாட்டும் அரசாக முழு அர்ப்பணிப்புடன் இந்த அரசு செயல்பட்டு வருகிறது. மதிப்போடும், உரிமையோடும், சுயமரியாதையுடனும் நாம் இருக்க பெரியாரும், அம்பேத்கருமே காரணம்.

தமிழ்நாடு அரசின் நடவடிக்கையால் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவாகும் வழக்குகள் நடப்பாண்டில் 6 சதவீதம் குறைந்துள்ளன. இதுவரை ஆணையத்துக்கு வரப்பெற்ற 5,191 வழக்குகளில் 4,038 வழக்குகள் முடிக்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின சமூகத்தை சேர்ந்தவர்களின் கல்வி அறிவை உயர்த்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பழங்குடியின மாணவர்கள் தங்கி படிக்க அவர்கள் பகுதியிலேயே பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் தொழில் முனைவோர் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த 2 ஆண்டுகளில் 600க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு 30 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது

பழங்குடியினருக்கான நிதியில் இருந்து கல்விக்கு மட்டும் 71.31 சதவீத நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் எளிதில் கல்வி பெற கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான சமமான உரிமைகள் உறுதி செய்யப்படுகின்றன என்றார்.

தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, கோவி.செழியன், சி.வி.கணேசன் மற்றும் வி.சி.க. தலைவர் திருமாவளவன், தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர்.

## மத்திய அரசை கண்டித்து

# கோவில்பட்டியில் கனிமொழி எம்.பி. தலைமையில் தி.மு.க. ஆர்ப்பாட்டம்

கோவில்பட்டி, மார்ச் 30-

கோவில்பட்டியில் மத்திய அரசை கண்டித்து கனிமொழி எம்.பி. தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ், 100 நாள் வேலை உறுதித் திட்டத்திற்கு விடுவிக்க வேண்டிய ரூ.4,034 கோடி நிதியை வழங்காமல் காலம் தாழ்த்தி வரும் மத்திய அரசைக் கண்டித்து, கோவில்பட்டி மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் நேற்று தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் எதிரில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.




இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில், தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், பாராளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி கலந்து கொண்டு கண்டன முழக்கமிட்டு, கண்டன உரையாற்றினார்.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில், தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், சமூக நலன் – மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான கீதா ஜீவன் முன்னிலை வகித்தார்.

தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, கோவில்பட்டி நகர் மன்ற தலைவர் கா.கருணாநிதி, ஒன்றியச்செயலாளர் வீ.முருகேசன், தலைமைக்கழக பேச்சாளர் சரத் பாலா, மாவட்டத் துணைச் செயலாளர் ஏஞ்சலா மற்றும் தி.மு.க. நிர்வாகிகள், வேலை உறுதித் திட்ட பணியாளர்கள் கலந்து கொண்டு கோரிக்கைகளை வலியுறுத்திக் கோஷமிட்டனர்.

# 2 நாட்களுக்கு வெயில் சுட்டெரிக்கும்

## வானிலை ஆய்வு மையம் தகவல்

சென்னை, மார்ச் 30-

2 நாட்களுககு வெயிலின் தாக்கம் அதிகரித்து காணப்படும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேலும், சென்னையில் வரும் நாட்களில் 100 டிகிரி வெயில் சுட்டெரிக்கும் என்றும் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் நாளை வரை தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

ஏப்ரல் 1, 2 ஆகிய தேதிகளில் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் ஓரிரு இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை 2 டிகிரி செல்சியஸ் உயரக்கூடும். தமிழகத்தில் அதிகபட்ச வெப்பநிலை ஓரிரு இடங்களில் இயல்பை விட 2- 3 டிகிரி செல்சியஸ் அதிகமாக இருக்கக்கூடும்.

சென்னையில் வரும் நாட்களில் 100 டிகிரி வெயில் சுட்டெரிக்கும். அதிகபட்ச வெப்பநிலை 2-3 டிகிரி செல்சியஸ் வரை உயரக்கூடும் என்று வானிலை மையம் எச்சரித்துள்ளது.



● சென்னை சைதாப்பேட்டை எம்.சி.இராஜா ஆண்கள் விடுதி வளாகத்தில் புதியதாக கட்டப்பட்டு வரும் ஆண்கள் விடுதியின் கட்டிட கட்டுமான பணிகளை நேற்று பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது கண்காணிப்பு பொறியாளர்கள் முத்தமிழரசு, செயற்பொறியாளர் விஜயானந்த், மாலதி மற்றும் பொறியாளர்கள் உடனிருந்தனர்.

# தொடரும் டேங்கர் லாரிகள் ஸ்டிரைக்: சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்

நாமக்கல், மார்ச் 30-

தொடரும் டேங்கர் லாரிகள் வேலை நிறுத்தத்தால் சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. டேங்கர் லாரி உரிமையாளர்களுக்கு 2 நாட்களில் ரூ.6 கோடி இழப்பு ஏற்படுள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாமக்கல்லை தலைமை இடமாக கொண்டு தென் மண்டல எல்.பி.ஜி. டேங்கர் லாரி உரிமையாளர்கள் சங்கம் செயல்பட்டு வருகிறது. அந்த சங்க உறுப்பினர்களின் டேங்கர் லாரிகள் மூலம் மத்திய அரசின் பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களின் சுத்திகரிப்பு நிலையங்களில் இருந்து சமையல் கியாஸ் சிலிண்டர்களில் நிரப்பும் பாட்டிலிங் மையங்களுக்கு ஏற்றி செல்லப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே எண்ணெய் நிறுவனங்களுடன் நடைமுறையில் உள்ள ஒப்பந்தம் ஆகஸ்டு மாதத்துடன் முடிவடைய உள்ளது. பின்னர் செப்டம்பர் மாதம் முதல் புதிய ஒப்பந்தம் நடைமுறைக்கு வர உள்ளது. இதனிடையே புதிய ஒப்பந்தத்திற்கான விதிமுறைகளில் சில தொழிலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் உள்ளதாகவும், எனவே விதிமுறைகளை தளர்த்த வேண்டும் எனவும் லாரி உரிமையாளர்கள் தரப்பில் கோரிக்கை வைக்கப்பட்டது.


அதைத்தொடர்ந்து பல்வேறு கட்ட பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. இருப்பினும் கோரிக்கைகள் நிறைவேறவில்லை. மேலும் கடந்த 24-ந் தேதி வரை எண்ணெய் நிறுவனங்களிடம் இருந்து டேங்கர் லாரி உரிமையாளர்களுக்கு சாதகமாக எந்த அறிவிப்பும் வரவில்லை. பின்னர் தென்மண்டல எல்.பி.ஜி. டேங்கர் லாரி உரிமையாளர்கள் சங்கம் சார்பில் கடந்த 3 தினங்களுக்கு முன்பு முதல் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

கடந்த 3 தினங்களுக்கு முன்பு டேங்கர் லாரி உரிமையாளர்கள் வேலை நிறுத்த போராட்டம் தொடங்கியது. இதையடுத்து கோவையில் நடந்த இருதரப்பு பேச்சுவார்த்தையும் தோல்வி அடைந்தது. இதனால் நேற்று முன்தினம் 2-வது நாளாக வேலை நிறுத்த போராட்டம் தொடர்ந்தது. அதன் காரணமாக நாள் ஒன்றுக்கு சுமார் ரூ.3 கோடி இழப்பு வீதம் 2 நாட்களில் ரூ.6 கோடி வரை இழப்பு ஏற்பட்டுள்ளதாக டேங்கர் லாரி உரிமையாளர்கள் தெரிவித்து உள்ளனர்.

இதுகுறித்து தென் மண்டல எல்.பி.ஜி. டேங்கர் லாரி உரிமையாளர்கள் சங்க தலைவர் சுந்தரராஜன், செயலாளர் செந்தில் ஆகியோர் கூறுகையில், "தமிழ்நாடு, புதுச்சேரி, கர்நாடகா, கேரளா, ஆந்திரா, தெலுங்கானா ஆகிய 6 மாநிலங்களில் வேலை நிறுத்த போராட்டம் காரணமாக டேங்கர் லாரிகளில் சமையல் கியாசை ஏற்றுவது முழுமையாக நிறுத்தப்பட்டுள்ளது. நாள் ஒன்றுக்கு குறைந்தபட்சம் 1,000 லாரிகள் முதல் அதிகபட்சமாக 1,500 லாரிகளில் கியாஸ் ஏற்றப்படவில்லை. ஆனால் ஏற்கனவே ஏற்றப்பட்ட சமையல் கியாஸ் அந்தந்த பாட்டிலிங் மையங்களில் இறக்கப்பட்டு வருகின்றன.

வேலைநிறுத்த போராட்டத்தால் நாள் ஒன்றுக்கு சுமார் ரூ.3 கோடி இழப்பு வீதம் 2 நாட்களில் ரூ.6 கோடி வரை இழப்பு ஏற்பட்டுள்ளது. இதேநிலை நீடித்தால் 4 நாட்களில் சமையல் கியாஸ் சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்படும். அதனால் மக்கள் பாதிப்பிற்கு உள்ளாகும் நிலை உருவாகும். அதற்குள் எண்ணெய் நிறுவன அதிகாரிகளிடம் இருந்து லாரி உரிமையாளர்களுக்கு சாதகமான தகவல் வரும் என நம்புகிறோம்" என்று அவர்கள் கூறினர்.

இந்நிலையில் தென் மாநிலம் முழுவதும் நேற்று 3வது நாளாக டேங்கர் லாரிகள் ஸ்டிரைக் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சுமார் 4,000-க்கும் மேற்பட்ட எல்.பி.ஜி. கேஸ் டேங்கர் லாரிகள் இயக்கப்படாமல் ஆங்காங்கே நிறுத்தப்பட்டுள்ளது. இதனால், தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களில் சமையல் எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.



● சென்னை நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி மற்றும் பதிவுத்துறை வளாக கூட்டரங்கில் 2025-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்திற்கான அனைத்து இணை ஆணையர்களின் பணித்திறன் குறித்த ஆய்வுக்கூட்டத்தில் மதுரை கோட்டம் போடிநாயக்கனூர் வரி விதிப்பு சரகத்தை சார்ந்த மறைந்த வணிகர் அ.சத்தியமூர்த்தியின் குடும்பத்தினர் ச.மகாலட்சுமிக்கு வணிகர் நல வாரியம் சார்பில் குடும்ப நல நிதி உதவித்தொகையாக ரூ.3 லட்சம் காசோலையை அமைச்சர் பி.மூர்த்தி வழங்கினார்.



● மதுரை மேற்கு தொகுதிக்குட்பட்ட கொடிமங்கலம் புதூர் கிராமத்தில் ரூ.17.95 லட்சம் மதிப்பீட்டில் கிராம சாவடி அமைப்பதற்கான பூமிபூஜையை நேற்று முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, பா.குமார், எம்.எஸ்.கே.மல்லன், பரவை ராஜா, கு.திரவியம், வி.பி.ஆர்.செல்வகுமார், நீதிகாந்த், விநாயகமூர்த்தி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.